

# ரமணோதயம்

ஜூலை 2020
காலாண்டு

அருணை விஜய இதழ்
விலை ₹ 20





‘வாழையடி வாழையென’ வளர்ந்து வரும் பகவான் திருக்கூட்ட மரபின் வழிநடாத்தும் தலைவராக இதுகாறும் இருந்து, பகவானின் அருட்பேரலை அகிலமுழுதும் விகசிக்க பெருந்தொண்டாற்றியுள்ள நமது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய திரு.சுந்தர ரமணனிடம் இருந்து ஆஸ்ரம தலைவர் பொறுப்பை Dr. ஆனந்த் (வெங்கட் ரமணன்) ஏற்றுள்ளார்.

ஸத்வமும் திறமையும் நிரம்பிய அவரது தலைமையில் ரமணப்பேரொளி இயக்கம் மிக உயர்ந்த சிகரங்களை எட்ட பகவானின் அருள் கூட்டுவதற்கு ரமணோதயத்தின் பிரார்த்தனைகளும் வாழ்த்துக்களும்

உதயம் 19 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2020

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் ‘ரமணோதயம்’ என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அருணை விஜய இதழ், ஜூலை 2020


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 17 |
| 3 | குருவே எல்லாமும் | பேராசிரியர் K. சுப்ரஹ்மண்யன் | 23 |
| 4 | இனிவரும் திருநாட்கள் | | 29 |
| 5 | ஒன்றே ஒன்று | S. மஹாலக்ஷ்மி | 30 |
| 6 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 31 |
| 7 | அசலமாம் ஔஷதம் | சேலம் சேதுகுமாரன் | 35 |
| 8 | அக்ஷர மணமாலை - ஒரு தத்துவக் கருவூலம் - பகுதி 19 | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 40 |
| 9 | சப்ரிஜிஸ்திரார் நாராயண ஐயர்-2 | வி. நிரஞ்சன் | 50 |
| 10 | ரமணாயனம் | க்ரேஸி மோஹன் | 54 |
| 11 | மேல்மேல் தாழ்ந்திடும் மெல்லியர் சேர்ந்து மேன்மையுற்றிடும் எங்கள் ரமணாஸ்ரமம் | ஆகுரா | 58 |
| 12 | செய்திகள் | | 74 |

# ஆசிரியர் உரை

## பல பா[4]வங்களில் ஒளிரும் பரமன்

பிறந்ததிலிருந்து நாம் உடலால் உள்ளத்தால் எவ்வளவோ மாறியிருக்கிறோம். நவீன உயிரியல் விஞ்ஞானம், ஒவ்வொரு ஏழு ஆண்டுகட்கும் நம் உடலின் செல்கள் அனைத்தும் முழுதுமாக மாறி புதுப்பிக்கப்படுகின்றன என்று கூறுகிறது. நம் உணர்ச்சிகளும் வினாடிக்கு வினாடி மாறுகின்றன. ஆனால் 'நான்' என்னும் எண்ணம் மட்டும் மாறாமல் இருந்து வருகிறது. மனம் வேலை செய்யாத ஆழ் உறக்க நிலையிலும்கூட அந்த 'நான்' இருந்து வருகிறது. பிறகு காலையில் விழித்து எழும்போது அதுவும் விழித்து எழுகிறது. உடல், மனம் இவற்றைத் தள்ளிய பின்னும் உயிராக உள்ள அந்த மாறாத 'நான்' என்ன? இதை மூளையால் அறியவோ, மனதால் உணரவோ முடியாது. அந்த 'நான்' என்பதைத் தன்னைத்தானே தன்னால் அனுபவித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிறார் பகவான். நான் யார் என்பதைத் தெரிந்துகொண்டு, அனுபவிக்க வேண்டும் என்ற உள்முக நோக்குடன் 'நான்' என்பதின் அடிப்படையே என்பதை அறிவதே பகவானின் 'நான் யார்' சாதனை.

மெய், மொழி மனம் கடந்த உயிர்த் தத்துவமாக உள்ள ஆன்மாவே உண்மையான நான். மனத்தைச் சார்ந்த 'நான் ஒரு தனி ஜீவன்' என்று எண்ணும்போது 'நான்' என்னும் அஹங்காரம் உள்ளது. அந்த அஹங்கார நான் அழிபட்டு எச்சார்புமற்ற உயிர்த் தத்துவமாக மட்டும் உள்ள 'தான்' என்ற ஆத்மாவே பகவான் குறிப்பிடும் 'நான்'. 'நான்' என்பதன் மூலம் என்ன என்று காண்பதிலேயே மனம் ஒருமைப்பட்டு இருந்தால் உடம்பையும் மனத்தையும்

*நானாக என்னும் தவறான பா⁴வம் கழன்று விழுந்தால் மனமும் கழன்றுவிடும். பேருண்மையான 'நான்' என்பதை மனத்தாலன்றி அதுவாகவே இருந்து அனுபவிக்கலாம் என்றார் பகவான். உடலின் புன்மைகளும், மனத்தின் தாழ்மைகளும் தொடாத என்றும் அழியாத சத்யமான உயிர்த் தத்துவமாகவே இருக்கலாம் என்கிறார் நம் குருநாதர்.*

*எவ்விதமான சடங்கோ, உணர்ச்சிப் பொங்குதலோ இல்லாத, கடவுள் என்ற பிரஸ்தாபம்கூட இல்லாத உபதேசம், உலக ஞானாசிரியர்களிலேயே மிகச் சுருக்கமான உபதேசம். அவ்வளவே! தீவிரமான சமய நம்பிக்கை இல்லாதவர்கள்கூட பகவானின் அறிவார்ந்த உபதேசத்தில் ஈர்க்கப்பட்டனர்.*


*நம்பிக்கை குறைந்தவர்களைக்கூட விலக்காமல் இங்ஙனம் அறிவார்ந்த உபதேசம் வழங்கினார். அதேசமயம், ஆத்மஞான சாகரம் மட்டும் அன்றி, பக்தி சாகரமாகவும் விளங்கினார். 'நான்' என்ற விசாரத்தில் ஒருவன் எண்ணத்தின் மூலம் என்ற தீவிர ஈடுபாட்டுடன் முனைகிறான். அந்தத் தேடுதலின் இறுதி நிலையில், ஈசனின் அருள் அவனது சுத்த மனத்தை ஆட்கொண்டு, மனத்தையே அழித்து, ஆத்ம சாட்சாத்காரத்தில் அவனைக் கரைக்கிறது என்கிறார் பகவான்.*

*வெளிவளி தீநீர் மண்பல உயிராய்*
*விரிவுறு பூத பௌதிகங்கள்*
*வெளிஒளி உன்னை அன்று இன்றெனின்*
*வேறுயான் ஆருளன் விமலா? (அருணாசல பதிகம், 7)*

*என்று அனைத்துமே இறையுரு என்கிறார் பகவான்.*

*எண்ணுரு யாவையும் இறையுரு ஆமென*
*எண்ணி வழிபடல் உந்தீபற*
*ஈசன் நற்பூசனை உந்தீபற*

*என்பது பகவானின் உபதேசம்.*



*யாதுமாகி நின்றாய் காளி*
*எங்கும் நீ நிறைந்தாய்*

என்று இறைவியை வாழ்த்தினார் மஹாகவி. இறைவன் ஒருவனே எல்லாமாகி, நிற்பவன் என்ற மஹாகவி வாக்கின்படி அதேபோல் இறைபக்தியின் பரிணாமத்தில் உச்ச நிலையில் ஞானம் முகிழ்ந்த நிலையில், ரமண பகவான், எல்லாமாகி நிற்பவன். பகவான் இத்திறலன், இன்னவன் என்ற வரையறையில், அடக்க முடியாது. அவனை அறிய முயலும் முயற்சியில், தொடக்கத்தில் ஏதோ ஒரு பா$^{4}$வத்துடன் இறைவனுடன் பிணைப்புகொண்டு அப்பிணைப்பினை வலுவாக்க வேண்டும். அந்த பா$^{4}$வத்துடன் இறைவனை உள்ளே உணரத் தொடங்கும்போது, அந்த பா$^{4}$வமே நம் சாதனைக்கு பெரும் வலிமை கொடுக்கிறது. அந்த வலிமையே இறுதியில் அந்த பா$^{4}$வ உணர்வினைக் கடந்து அத்வைத நிலையை அடையச் செய்கிறது. பகவானும் இதையே உபதேச உந்தியாரில் கூறுகிறார்.

*பா$^{4}$வ பலத்தினால் பா$^{4}$வனாதீ$^{3}$த ஸத்*
*பா$^{4}$வத் திருத்தலே உந்தீபற*
*பரபக்தி தத்துவம் உந்தீபற*

எந்த பா$^{4}$வத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற கேள்வி எழலாம். இதற்கு விடையாக அவரவர் தன்மைக்கு ஏற்ற பா$^{4}$வத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்பதை முருகனார் கூறுகிறார்.

அவரவர் தம்தன்மையால் அவரவர் பால் சேர்ந்துலகின்
எவ்வெவர் மாட்டும் இயல்பாக இருந்து ஒளிர்வோன்

என்கிறது ரமண புராணம். உலகியல் பால்பட்ட உறவுக்களையே வாய்க்காலாகப் பயன்படுத்தி அதன் வாயிலாக வெளிப்படும் அன்பைப் பதங்கமாகச் செய்து ஸத்குருவாம் இறைவனை வழிபடலே முருகனார் கூறும் வழிபாடு.

கண்ணனும் இப்பன்முக வழிபாட்டினை

க$^{3}$திர் ப$^{4}$ர்த்தா ப்ரபு$^{4}$: ஸாக்ஷீ நிவாஸ: ஶரணம் ஸுஹ்ருத்

எனக் குறிப்பிடுகிறான்.

இப்பா$^{4}$வ பலத்தின் முறைமையை ரமண சந்நிதி முறையில் எழில்படக் கூறுகிறார் முருகனார். எல்லாரிடமும் இயல்பாய் இருந்து ஒளிர்கின்ற பகவானை அவரவர் தன்மைக்கு ஏற்றபடி வழிபடுதலை பல்வேறு உறவுப் பிணைப்புகள் மூலமாக விளக்குகிறார் முருகனார்.

*1. உபாஸனையின் உச்சநிலை:*

அருணாசலப் பரமனுடன் தனக்கு இருக்கும் ஆழ்ந்த பிணைப்பை ‘அப்பாவுக்குப் பிள்ளை அடக்கம்’ என்று வெளிப்படுத்துகிறார் பகவான். பகவானே தன்னை வழிப்படுத்தும் தந்தையாகப் பாடுகிறார் முருகனார்.

பண்டாய மன்னுயிர்க்குப் பரமபிதா நீயாயின்
பெண்டாய மாதாஆர் பிறங்கு சீர்வேங்கடவா
பெண்டாய மாதாவும் பேணுங்கால் நீயாயின்
உண்டாய எச்சமாம் உயிர்த் தொகையும் நீஅன்றே

‘தந்தைஆவாய் நீயே’ என்று துவங்கி, அது மட்டுமா, அன்னை, குழந்தைகள், ஏனைய உயிர்கள் அனைத்துமே நீ அல்லவா என்கிறார் முருகனார்.

*தந்தையின் கடமை எது? மகனைச் சான்றோன் ஆக்குதல்தான் தந்தையின் கடமை. நமது தந்தையாய் வந்து நம்மையெல்லாம் ஆன்ம வித்தையில் சான்றேன் ஆக்குபவன் பகவான். 'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே' என்ற புறநானூறு வாக்கினை முழுவதுமாய் நிறைவேற்றிக் காட்டும் ஆதர்ச தந்தையாக பகவானைக் காட்டுகிறார் முருகனார். தன்னுடைய குழந்தைகளைச் சிக்கலில் சிக்கிக் கொள்ளாமல், எச்சரித்துக் காக்கும் தந்தையாகத் திகழ்கிறார் பகவான். 'எல்லாமே விதிப்படித்தான் நடக்குமா' என்பதைச் சோதிக்க எண்ணி மூன்றுமுறை ஆலயக் குளத்தில் குதித்து, மூன்று முறையும் ஏதோ ஒரு சக்தியால் கரையில் தள்ளப்பட்டு, ஆம் பகவான் கூற்று உண்மைதான் என்று உணர்ந்து திரும்பிய கோஹனிடம் "எதிலும் நம்பிக்கை வேண்டும். முட்டாள்தனமாக சோதனையில் ஈடுபடக்கூடாது" என்று அறிவுறுத்திய அன்புத் தந்தை பகவான். அதேபோன்று வருவதை முன்பே உணர்ந்து "இன்னும் மூன்று மாதம் உனக்குக் கடினமான காலம். ஆசிரமத்தை விட்டு வெளியே செல்லாமல் உள்ளேயே இரு" என்று Spiritual Quarantine இல் மற்றோர் பக்தரை அமர்த்திக் காத்தவர் பகவான்.*

*2. தாய்போல் பரிந்து வரும் தயாபரன்:*

*தம்மைப் புரக்கும் ரமண பகவானைத் தாயுமாகக் காண்கிறார் முருகனார். "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே!" என்று குழந்தையைப் பெற்று வளர்க்கும் தாயின் கடமையைக் கூறுகிறது புறநானூறு. தாயின் சிறப்பு என்னவெனில் சேற்றில் விழுந்த குழந்தை சேற்றைத் தானே கழுவிக்கொண்டு சுத்தமாக வரவேண்டும் என்று ஒருதாய் காத்திருப்பதில்லை. தானே சென்று குழந்தையை விரைந்தெடுத்து சேற்றைக் கழுவித் தூய்மை ஆக்குபவள் தாய். அதுபோன்றே அடியார் எப்பிழை செய்யினும் அப்பிழைகள்*

எல்லாவற்றுடனேயே அடியாரை ஏற்று அருள்மழை பொழியும் தாய், பகவான்.

*பிள்ளை புரிந்த பிழை உளதேல் அப்பிழையைத்*
*தள்ளை பொறுத்தருளத் தக்கது போல்ஏதும்*
*அறிந்தும் அறியாது நான்ஆற்று பிழைஉண்டேல்*
*மறந்து மதியாதே மகிழ்ந்து உவத்தி. (ரமண புராணம்)*
*(தள்ளை=தாய்)*

குழந்தை செய்யும் சிறுபிழைகளைத் தாய் பொறுத்துக்கொண்டு, குழந்தையுடன் மகிழ்தல்போன்று நான் அறிந்தும், அறியாமலும் செய்கின்ற பிழைகளைப் பொருட்படுத்தாது, எனக்கு அருளி மகிழ்கின்ற தாயல்லவா நம் ரமண பகவான் என்று வியக்கிறார் முருகனார்.

**3. தலைவனாய் எனக்கு ஆகும் தத்துவ சிகரம்:**

முற்றிலுமாய் தன்முனைப்பு அஹங்காரம் நீங்கிய நிலையில் இறைவனைத் தன் ஆண்டானாக, தலைவனாகக் கருதி வழிபடல் மற்றொரு வழி.

*எனக்கே ஆட்செய் எக்காலத்தும் என்றுஎன்*
*மனக்கே வந்து இடைவீடு இன்றி மன்னி*

என்று ஆழ்வார் பாடுகிறார். நான் உன்னை என் தலைவனாய் ஏற்றுக்கொண்டு மறுகணமே நீ என் மனத்துள் புகுந்து, அங்கு வேறு எந்த உலக ஆசையும் புகவிடாமல், சிறிதும் இடைவெளி இல்லாமல், என் மனத்தில் பூரணமாகக் குடிகொண்டாய் என்பது அடியாரின் அழகான சித்திரம். இதே நிலையில் ரமணப் பெருமான் வந்து ஆட்கொண்ட சிறப்பை முருகனார் பாடுகிறார்.

*குழூமிய தொழும்பரோடு கூட்டுறவு பூண்டு*
*தொழும் இயல்புடைப் பாசுகம் பெருக வாழ்வோம்*
*விழுமிய தனித்தலைமை வேங்கடப் பிரானுக்கு*
*எழுமையும் அடிக்கு உழுவல் ஓய்ந்த அடியோம்*
*(தொழும்பர்=அடியவர்; உழுவல்=முறைமை)*

*எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு*
*உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்*

என்று ஆண்டாள் பாடியதுபோல் தன்னைப்போலவே இறைவனிடம் அன்புபூண்டு தொண்டு செய்யும் அடியாரோடு கூட்டுறவு கொண்டு தனிப்பெரும் தலைவனாய் விளங்கும் ரமணனின் திருவடிக்கு ஏழேழ் பிறவியிலும் தொண்டு செய்வோம் என்று பாடுகிறார் முருகனார்.

*ஏழேழ் படிகால் எமை ஆண்ட*
*பெம்மான் ஈமப் புறங்காட்டில்*
*பேயோடு ஆடல் புரிவானே*
*பன்மா மலர்கள் அவைகொண்டு*
*பலரும் ஏத்தும் பழையனூர்*
*அம்மா ஆலங் காடாஉன்*
*அடியார்க்கு அடியேன் ஆவேனே*

*(சுந்தரர் தேவாரம், 052 திருவாலங்காடு)*

"திருவாலங்காட்டில் சுடுகாட்டில் நடனம் புரிகின்ற இறைவன் சிவபெருமான் என்னை ஏழேழ் பிறவிக்கும் தொடர்ந்து ஆண்டுகொண்டான். அவனது அடியார்க்கு அடியானாய் நான் ஆவேன்" என்கிறார் சுந்தரர்.

*அன்போடு நாமம்கேள் அன்பர்தம் அன்பருக்கு*
*அன்பன்ஆயிட அருள் அருணாசலா*

என்று பகவான் அக்ஷரமணமாலையில் வேண்டுவதை அடியொற்றி முருகனாரும் பாடுகிறார்.

*ஒழிவிலாக் காலமெல்லாம் உடனாய் மன்னி*
*வழுவில்லா அடிமை செய்யவேண்டும் நாம்*

என்று தன் தலைவனுடனேயே எந்நாளும் இருந்து குற்றம் எதுமில்லாத் தொண்டினைச் செய்வதே என் குறிக்கோள் என வாழ்ந்தவர் முருகனார். தன்முனைப்பு ஏதுமற்ற அவரது பக்தி உணர்வு எத்தகைய ஆழ்ந்த நிலை பெற்றது என்பதற்கு எடுத்துக்காட்டு - பகவானுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யும்போது,

*பகவான் ஏதேனும் கேள்வி கேட்டால், எழுந்திருந்து பதில் சொல்லவேண்டும் என்ற உணர்வுகூட இல்லாமல் உடனே பல்லிபோல் தலையைத் தூக்கிப் பதில் சொல்வார். "என்ன, எழுந்திருக்க வேண்டும் என்ற எண்ணம்கூட இல்லாமல், படுத்த நிலையிலேயே பதில் கூறுகிறீர்களே" என்று கேட்டனர் அன்பர்கள். முருகனார், "என்ன செய்வது! பகவான் குரல் கேட்ட மாத்திரத்திலேயே வேறு எல்லா உணர்வும் போய், அதற்குப் பதில் கூற வேண்டும் என்ற உணர்வு மட்டுமே எஞ்சியுள்ளதே!" என்பார். இங்ஙனம் தன்முனைப்பே இல்லாமல் முற்றிலும் பகவானின் தொண்டராகவே வாழ்ந்தவர் அவர்.*

*விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன்*
*விரும்பி ஆட்பட்டேன்*

*என்று சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் கூறுவதுபோல், தானே தேர்ந்து தன் அகம் முழுதும் பகவானாம் தலைவனுக்கே அர்ப்பணித்தவர் முருகனார். பகவானின் சீரையும் உபதேசத்தையும் பரப்புவதே தன் குறிக்கோள் எனக் கொண்டு ரமண சந்நிதி முறை, குருவாசகக் கோவை போன்ற நூல்களின் மூலம் பல்லாயிரக்கணக்கான பாடல்களை இயற்றி, பெரும் தொண்டு செய்தார்.*

*தம்பிரான் தோழர்:*

*சம்சாரத்தில் கரையப் போன சுந்தரரரைத் தடுத்து ஆட்கொண்டு, தன் தோழனாக ஆட்கொண்ட சுவாரசியமான நிகழ்ச்சியை பெரிய புராணம் வருணிக்கிறது. சம்சாரியாக வந்து தன்னைக் கண்டு புகுந்த முருகனாரையும், தாமரை இலைத் தண்ணீர் போல உலக வாழ்வில் ஒட்டாத பக்குவியாக பரிணமிக்க வைத்தார் பகவான்.*

*"தோழமை ஆக உனக்கு நம்மைத் தந்தனம்"*

*என்று சிவபெருமான் சுந்தரர்க்கு அசரீரியாக அருளிய வாக்கினை ஒப்ப, முருகனார் போன்ற பேரன்பருக்கு*

அருள் தோழமை கிட்டியது. இதை 'ரமண சந்நிதி முறை' பாடலில் கூறுகிறார் முருகனார்.

நட்பொடு பகைஅன்று நடுநிலையா முன்
பெட்பது பொருள் எனப் பேசிய பெருமானை
பெட்பது பொருள் எனப் பேசிய ரமணரின்
நட்பது பொருள் எனநயந்து உனைத் தொழுவம்.

"நட்பு, பகைமை என்ற இரண்டையும் தாண்டி நடுநிலைமையில் இருப்பதுதான் பொருள் என்று நடுநிலை பற்றிப் பேசும் ரமணரே! உனது நட்பு ஒன்றே நான் பொருள் எனக் கருதுவது" என்று தான் ரமணருடன் கொண்ட தூய நட்டைப் பற்றிப் பாடும் முருகனாரின் இப்பாடல் மிக அழகியது.

நட்பின் மிக உயர்ந்த நிலையில் நீ என்னை நண்பன் என்று கருதுவதை நிறுத்தி விட்டாலும் நான் உங்களை என் உயிர் நண்பன் எனக் கருதுவதை நிறுத்த மாட்டேன் என சுந்தரர் பாடுவதை ஒத்துள்ளது முருகனாரின் இப்பாடல்.

ஒட்டீர் ஆகிலும் ஒட்டுவன் அடியேன்
உம்மடி அடைந்தவர்க்கு அடிமைப்
பட்டேன் ஆகிலும் பாடுதல் ஒழியேன்
பாடியும் நாடியும் அறிய
நட்டேன் ஆதலால் நான் மறக்கிலேன்
நாட்டியத்தான் குடி நம்பீ.

என்பது சுந்தரரின் உயர்ந்த பாடல்.

"நீ ஒதுக்கினாலும் நான் உன்னையே சார்ந்து இருப்பேன். உம்முடைய அடியவர்க்கு எம்மை அடிமைப்படுத்தினாலும் உம்மைப் புகழ்ந்து பாடுதலை நான் நிறுத்த மாட்டேன். நான் என் பாடலாலும், நாட்டத்தாலும் அறியவேண்டிய உன்னை என் நண்பனாகக் கொண்டேன். எனவே நாட்டியத்தான் குடியில் உள்ள இறைவனாம் சிவபெருமானே! என்

தோழனான உன்னை, நான் என்றும் மறக்கமாட்டேன்" என்பது அவர் பாடல்.

**காதல் பெருந்தலைவன் ரமணன்:**

தமிழிலக்கியத்தில் சுவைமிகுந்த பகுதி அகத்துறை சார்ந்த பாடல்கள். இவற்றுற்ளும் தெய்வீகக் காதல் பற்றிப் புனையப்பட்ட பாடல்கள் மிகுந்த கருத்தாழமும் சுவையும் கொண்டவை. இறைவனை அடைந்து அவனுடன் ஒன்றவேண்டும் என்ற அன்புப்பெருக்கு, அவனை இன்றும் அடையவில்லையே என்ற விரகதாபம், என் மகள் அவனையே எண்ணி உருகுகின்றாளே என்ற அன்னையின் கவலைப் பெருக்கு, தோழியின் ஆறுதல் கூற்று, இறுதியில் தன் நாயகனிடம் இணையும் பேரின்ப நிலை போன்ற பல்வேறு வாயில்களில் தமது உணர்ச்சிப் பெருக்கினைப் பாய விடுகிறார் முருகனார்.

"மானிடவர்க்கு என்று பேச்சுப் படில் வாழகில்லேன்" என்ற ஆண்டாளின் கூற்றுப்படி இறைவன் ஒருவனே என் தனிப்பெரும் தலைவன். அவனையன்றி வேறு எவரையும் மனத்தாலும் நினைக்கமாட்டேன் என்ற உறுதிப்பாடு இவ்வகத்துறைப் பாடல்களில் எழிலுடன் வெளிப்படுகிறது.

ஓர் எடுத்துக்காட்டு: "தன் நெஞ்சம் கவர்ந்த ரமணபிரான் என்னை விட்டு நீங்கிச் சென்று விட்டானே, வஞ்சகன் அல்லவா அவன்" என்று நாயகி விரக தாபத்துடன் உருகுவது, உணர்வு பொங்க கவிதை நயத்துடன் வெளிப்பட்டு நம் உள்ளத்தை உருக்குகிறது.

உஞ்சிடச் சார்ந்தார் உயிர்கவர் வேங்கடவர்
வஞ்சர் கல் நெஞ்சரால் அன்னே என்னும்
வஞ்சர் கல் நெஞ்சர்கண் மையலை எண்ணிஎன்
நெஞ்சம் புண் ஆகுமால் அன்னே என்னும்

(ஸ்ரீ ரமண சந்நிதிமுறை, அன்னை-1)

விரக தாபத்தால் உருகும் நாயகி தன் தாயிடம் கூறுவதுபோன்று அமைந்துள்ளது இந்த அழகிய பாடல்.

"தாயே! ஆத்ம சாட்சாத்காரம் அடைய வேண்டும் என்று எண்ணிச் சரண் அடைந்தவரின் உயிராகிய அகந்தையைக் கவர்ந்து அழிக்கும் வஞ்சகக் கல்நெஞ்சை உடையவன் பகவான் ரமணன். ஆயினும் அவர் அருள் பொங்கும் கண்ணால் ஏற்படும் மையலை எண்ணி என் நெஞ்சம் புண்ணாகிறதே! என்னே இந்த அதிசயம்!" என்பது இதன் பொருள்.

இங்ஙனம் தன் மகள் ரமண நாயகனையே எண்ணி உடல்நலம் அழிதல் குறித்து அவர் தாய் மருந்துவது 'நற்றாய் இரங்கல்' மூலம் வெளிப்படுகிறது.

அறவோய் எனுமால் அடிகேள் எனுமால்
இறவாய் பிறவா ரமண எனுமால்
உறவோய் எனுமால் உலற விழுமால்
சிறவா விதியேன் சிறுமா மகளே
(அடிகேள்=அடிகள் என்ப)

"என் தலைவிதி இப்படியா வந்து அமையவேண்டும்! எத்தகைய பா[4]வமாயினும் சரி, ரமண பகவானை உள்ளத்தே நிறுத்தி வழிபடத் தொடங்கிய பின் அகந்தை, ஆசைகள், அவற்றால் ஏற்படும் துன்பங்கள் அனைத்தும் ஓய்ந்து இன்பம் பெருகியது என்று தன் அனுபவத்தைக் கூறும் முருகனார், ரமணர் அருளாலே ஆசை-அச்சம்-அஹங்காரம் அனைத்தும் நீங்கும் என்று தெளிவாகக் கூறிவிட்டார்.

ரமணன் பதத்தை ரமித்தேனுக்கு ஆங்கே
சமனமாய்த் தீர்ந்தது உயிர்ச்தாபம் - யமநியம
சாதனைஓய்ந்து அன்பு தழைத்தேன் அகந்தைமயல்
வாதனை ஓய்ந்து இன்பமயத்து.

(ரமண ஞான போதம், 1792)

"உயிர்த்தாபம், அகந்தை, மையல் போன்ற தீயபண்புகள் ஒழிந்தது; அத்துடன் யமநியமம் போன்ற யோகப் பயிற்சிகளின் தேவையும் அற்றது. என் உள்ளத்தில் பேரன்பம் பேரின்பமும் பொங்கியது."

*தன்னில் அயலாக ஒன்றிலாத பரமாத்ம அனுபவத்தில் தன்னைக்கொண்டு சேர்த்த ஸத்குரு அதற்கு வழிகோலுவானாகி, உலகியல் முறைகளான வஞ்சம், அதனுதவியால் பொருள் சேர்க்க முயலுதல், அதனைக் காக்க முயற்சியால் கவலைகள் இவற்றை நீக்கி அருளினான். இந்த உலக வஞ்சனையாகிய மாய வலையில் சிக்கியிருந்த என்னுடைய இதயத்தில் நிரந்தரமாகக் குடிபுகுந்து, என்னை ஆண்டுகொண்ட திருவடியில் நான் சரண் புகுந்தபின், எனக்கு அச்சம் ஏதும் இல்லை. ஏனெனில் எனக்கு வேறாக வேறு ஒரு பொருளும் இல்லை.*

*த்விதியாஹை ப⁴யம் ப⁴வதி*

*தன்னில் அயலாக யாருமில்லாத நிலையில் அச்சத்திற்கு இடமேது?*

*வஞ்சவே தாள மயக்கவலைப் பட்டேனை*
*நெஞ்சிலே புக்கு நிரந்தரமாம் தந்நிலையில்*
*செஞ்செவே ஆண்டஅருள் சிற்பரன் மெய்ச்சேவடிகீழ்*
*அஞ்சவே தன்னின் அயல்புறம் ஒன்றிலையே.*

*(ரமண ஞான போதம், 1799)*

*“என் ஆசைகட்கு அடிப்படைக் காரணமான பந்தத்தை முழுவதுமாக அழித்துவிட்டான் ரமணன்” என்று எடுத்துக் கூறுகிறார்.*

*நிட்டையிலே என்னை நிறுவினான் சிற்பதத்தில்*
*பட்டிமனக் கற்பனா பந்தம்அறக் கெட்டதே*
*(ரமண ஞான போதம், 1804)*
*(பட்டி=நாய்)*

*இங்ஙனமே ரமண சந்நிதி முறையிலும், திருவெண்பா பகுதியில்,*

*அருட்பரனா நின்ற அருணாசலனே*
*குருப்பனாக உருக்கொண்டான் - விருப்பு அவனுக்கு*
*அன்பரது வாழ்க்கை அவிச்சை அறப்பொங்கு ஒளிசேர்*
*இன்பமயல் ஆக்கல் ஒன்றே.*

*(அவிச்சை=அவித்தை; குருப்பனவன்=பரமனை அறிந்த ஆசான்)*

அறியாமை என்ற அகஇருளில் தடுமாறித் துன்புறுகின்ற அன்பரது நிலையைக் கண்டு பெரிதும் பரிவுற்று அவ்விருளைக் கிழித்து அகற்றும் ஞானஒளியை வீசி அன்பனைப் பேரின்ப மயமாக்குவதே, அருளைப் பொழியும் இறைவனே உருவெடுத்து வந்த ரமண மாமுனிவரின் நோக்கம் என்கிறார் முருகனார்.

பகவானின் தனிச்சிறப்பு யாதெனில் எந்த வழியையும், எந்த மதத்தையும் அவர் குறை கூறியதே கிடையாது. குறிப்பாக சர்வ பரிபூரண அகண்ட தத்வமான பூரண நிலையை 'நானார்' விசாரத்தால் அடையச் சொன்னவரே ஒருவன் தன்னை அடியோடு ஒன்றுமில்லை என்று எளிமையாய் சூன்யமாக்கிக்கொண்டு இறைவனிடம் சரணாகதி என்று சமர்ப்பித்துக் கொள்ளும் பிரபத்தி மார்க்கத்தையும் சிறப்பித்துக் கூறிஉள்ளார். இப்படிச் சூன்யமானவனை ஈசனே ஆன்ம பூர்ணத்தால் நிறைவித்து ஞான விசாரத்தால் சேரும் இறுதி லட்சியத்தில் சேர்விப்பன்.

பகவான் உபந்யாசம் எதுவும் செய்ததில்லை. (ஒரே ஒருமுறை கீதாசாரத் தாலாட்டு பற்றி ஈசான்ய மடத்தில் பேசியது தவிர). உலகு கண்டிராத அதிசய ஆசானாக, தம்மை நாடி உண்மை விழைவோடு கேட்டவருக்குத் தெள்ளத்தெளிவாக மார்க்கம் காட்டினார். வாயினால் கூறுவதற்கு மேலாக அடியாரின் உயிர்க் கூறிலேயே பாய்ந்து உய்விக்கும் உன்னத உபதேசத்தை அருளினார் அருட்கதிராய் மின்னும் தனது தெள்ளிய பார்வையின் மூலமே உபதேச சாரத்தை எத்தனையோ பேருக்கு உட்புகுத்தினார். மதுரையில் அனுபூதி கண்டவர், அங்குறையும் மீனாம்பிகையாம் ஞானாம்பிகை போல நயன தீட்சை அருளும் அருள் மலை அவர். குருமுகமாக உபதேசம் பெறாமலேயே ஆத்ம சாட்சாத்காரம்

அடைந்தார். எனினும் குரு தேவை என்பதை நிச்சயமாகக் கூறினார். அருளின்றி ஸித்தியில்லை. அவ்வருளே குரு என்பது அப்படி அருள் வழங்க மானுட உருவில் குரு தேவைப்படுகிறார். தேவையுள்ள இடத்தில் தவிர ஆத்ம தாகம் கொண்டோருக்கு வழிகாட்ட இறைவனே மானிட குருவை அனுப்பி வைக்கிறான் என்கிறார் பகவான்.

அத்வைத தத்துவத்தை முற்றிலுமாக எடுத்துக்காட்டும் 'உள்ளது நாற்பது' நூலிலும் இறுதியில் 39ஆவது பாடலில், உலகம் முழுவதையும் உன்னில் இருந்து வேறுபடாமல் அத்வைதமாய்க் கண்டாலும் குருவுடன் மற்றும் அத்வைதப் பாங்கைக் கைக்கொள்ளாரோ அவர் உன்னிலும் மிக உயர்ந்த ஆத்மீகச் சுடர் என்பதை விடாமல் பற்றுவாய்.

"அத்துவித முவுல கத்து ஆகும், குருவினோடு
அத்துவிதம் ஆகாது அறி"

என்கிறார் பகவான்.

ஒளிமலை உச்சியில் ஒளிமயமாய் ஒன்றிய பகவானது ஆன்மிக ஒளி நமக்கு வழிகாட்டுமாக!

'வாழையடி வாழை யென' வளர்ந்து வரும் பகவான் திருக்கூட்ட மரபின் வழிநடாத்தும் தலைவராக இதுகாறும் இருந்து பகவானின் அருட்பேரலை அகிலமுழுதும் விகசிக்க பெருந்தொண்டாற்றியுள்ள நமது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய திரு. சுந்தர ரமணனிடம் இருந்து ஆஸ்ரம தலைவர் பொறுப்பை Dr. ஆனந்த் (வெங்கட் ரமணன்) ஏற்றுள்ளார். ஸத்வமும் திறமையும் நிரம்பிய அவரது தலைமையில் ரமணப்பேரொளி இயக்கம் மிக உயர்ந்ந சிகரங்களை எட்ட பகவானின் அருள் கூட்டுமாக எனப் பிரார்த்தனையுடன்

பகவான் பணியில் தங்கள்,
ராம் மோஹன்

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### 9. உள்ளுணர்வு

உள்ளுணர்வாவது இதயத்தில் ஸ்புரிக்கும் ஆன்மிக அதிர்வின் மூலம் அனைத்தையும் உணர்வதாகும்.

*குறள் 81: எண்ணலி ஊழி தவம்செய்துஇங்கு ஈசனை*
*உள்நிலைமை பெற்றது உணர்வு.*

பொருள்: பல யுகங்கள் ஏகாக்ர புத்தியுடன் தவம்செய்து இதயதயக் கமலத்தில் ஆத்மாவை (அ) ஈசனை நிலையாக நிறுத்தினால் அளவற்ற சக்தியையுடைய பெரும் ஞானத்தை அடையலாம்.

ஊழி: யுகமுடிவு. ஐந்து பூதங்களும் இறைவனில் ஒடுங்கும் காலம். ஐம்பூதங்களால் ஆன நமது தேகத்தில் ஊழிக்காலம் மரணம். வினைகளின் ஊழிக்காலம் ஞானசாதனையில் மனம் அழிதல்.

இதனையே ஞான வாசிட்டம்

தெரிபொருளும் தரிசனமும் சேரும்போதில்
சேர்ந்த தாம் அறிவு மிகச் சிறந்ததாகும்

என்று சாதகன் ஞானம் பெறும்போது, பேரின்பமும், பேரறிவும் கிட்டும் எனக் கூறுகிறது. மேலும் காகபுஜண்டர் சரிதத்தில்

*உள்ளும் புறமும் அசைவின்றி உயிர்மன்னும்*
*அடங்கும் எனில்*
*தள்ளூறாமல் ஒருக்காலும் தாதுவெல்லாம்*
*சடத்து உறையும்*

என்று கூறுகிறார்.

இதே கருத்தினை பகவானும்,

தேடாதுஉற்ற நல் திருவருள்நிதி அகத்து
இயக்கம் தீர்த்துஅருள் அருணாசலா

(அக்ஷரமணமாலை, 49)

என்று கூறுகிறார். மனத்தின் அசைவினால் இடைவிடாது இயக்கத்தால் நாம் ஆன்மிக அளவில் வறியவர் ஆகின்றோம். மனம் அசையாமல் ஆன்மாவில் நிலைபெற்று இருக்கும்போது நமக்கு பெரும்நிதியான அருணாசலனின் அருள் தேடாமலே கிடைக்கிறது.

குறள் 82: பல்லூழி காலம் பயின்றனை அர்ச்சித்து
நல்லுணர்வு பெற்ற நலம்.

பொருள்: பல ஆண்டுகாலமாக அசைவற்ற மனத்துடன் மனத்தை உள்நோக்கித் திருப்பி ஆத்மசாதனை செய்தால் அருணாசலத்தின் பேரருளுடன் ஒன்றலாம்.

திரும்பி அகந்தனை தினமகக் கண்காண்
தெரியும் என்றனைஎன் அருணாசலா

(அக்ஷரமணமாலை, 44)

என்கிறார் பகவான். 'தினம் அகக் காண்' என்றால் சற்றும் ஓயாத இடைவிடாத முயற்சி என்பது பொருள். இதையே ஔவையார் 'பல்லூழிக்காலம் பயின்று' என்று கூறுகிறார்.

குறள் 83: எண்ணற்கு அரிய அருந்தவத்தால் அன்றே
நண்ணப் படும்உணர்வு தான்.

பொருள்: இங்ஙனம் இடைவிடாமல் செய்கின்ற அரும் தபத்தால் இல்லாமல் ஆத்ம சாட்சாத்காரத்தை அடைய முடியாது.

எண்ணாயிரத்து ஆண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதினைக் கண்டுஅறி வார்இல்லை;
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினால்
கண்ணாடி போலக் கலந்துநின்றானே. (திருமந்திரம் 603)

*ப$^3$ஹூனாம் ஜன்மனாமந்தே ஞானவான் மாம் ப்ரபத்3யதே (கீதை 7-19)*

பல ஜன்மங்கள் தீவிர முயற்சி செய்தாலன்றி ஆத்ம ஞானம் சித்திக்காது. காண்பது அனைத்தும் பரமாத்ம ஸ்வரூபம் எனக் காணும்போது ஞானம் பூர்த்தியாகிறது.

குறள் 84: முன்னைப் பிறப்பின் முயன்ற தவத்தினால்
பின்னைப் பெறும் உணர்வு.

பொருள்: இங்ஙனம் இடைவிடாது செய்யும் ஆன்மிக சாதனையால் ஆன்மிக உணர்வு தூண்டப்பெற்று, ஞானம் பெறுவோம்.

ஞான வாசிட்டம் ஜனகர் கதையில்

சங்கல்ப நாசத்தால் எளிதாக
மனநாஸம் தானே எய்தும்
அங்குற்ற மனம் இறக்கின் ஜனனமரணங்கள்
எனும் மரமும் மாயும்
இங்கு இப்பால் எனைத்திருடும் கள்ளனைக் கண்டேன்
கண்டேன் இவன்பேர் நெஞ்சம்
பொங்குற்ற நெஞ்சத்தால் நெடுநாள் நொந்தேன்
இன்று பொன்று விப்பேன்.

“உலகாயதமாய் இதை நான் செய்வேன் என்று நாம் தினம் சங்கல்பங்களே நம்மை பந்தப் படுத்துகின்றன. இந்த சங்கல்பங்களை ஞான சாதனையால் நாசம் செய்யும்போது மனம் நாசம் அடைகிறது. ஜனனம், மரணம் என்ற பிறவிச் சுழலும் அழியும். இதுகாறும் ‘நான் யார்?’ என்னும் பேருண்மையை நான் அறியாமல் திருடிச் சென்ற திருடனையும் கண்டுபிடித்து விடலாம். இந்தத் திருடனுக்குத்தான் நம் அறிவு அற்ற மனம் என்பதாம். இந்த அலைகின்ற மனத்தால் இத்தனைநாள் அலைக்கழிக்கப்பட்ட நான், ஆத்மயோகப் பயிற்சியின் மூலம் இன்று நான் காப்பாற்றப் பட்டேன்” என்கிறார் முனிவர்.

*குறள் 85:* காயக் கிலேசம் உணர்ந்த பயன்அன்றே
ஓயா உணர்வு பெறல்.

பொருள்: உடல் ஒருநாள் அழிவுறும் என்ற அறிவைப் பெற்றதன் பயன் இடைவிடாத ஆத்மிக சாதனையில் ஈடுபட்டு 'நான்' மாயும் இந்த உடலோ, மாறும் மனமோ அல்ல! என்றும் மாறாத, அழியாத ஆத்மாவே நான் என்னும் உணர்வைப் பெறுதல் ஆகும்.

புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும் போக்குவதற்கே
மயில்வாகனனை வந்திக்க வேண்டும்

என்று அருணகிரி நாதர் கந்தர் அலங்காரத்தில் கூறுகிறார்.

*குறள் 86:* பண்டைப் பிறவி பயனாம் தவத்தினால்
கண்டுஅங்கு உணர்வு பெறல்.

பொருள்: முந்தைப் பிறவிகளில் ஒருவன் செய்த சாதனைகளாலும், தவத்தினாலும், நற்கருமங்களாலும் சாத்விக குணம் அடையப் பெறுகிறான். அவனது உள்ளார்ந்த முமுட்சுத்துவத்தினால் ஞான உணர்வை அடைகிறான்.

*குறள் 87:* பேராத் தவத்தின் பயனாம் பிறப்பின்மை
ஆராய்ந்து உணர்வு பெறின்.

பொருள்: 'நான் யார்' என்னும் உள்நோக்கிய விசாரமாகிய இடையறாத ஞான சாதனையினால் பிறப்பின்மையாகிய ஜீவன் முக்தியை அடையலாம்.

*குறள் 88:* ஞானத்தால் ஆய உடம்பின் பயன்அன்றே
மோனத்தால் ஆய உணர்வு.

பொருள்: ஞான சாதனைகளினால் உண்டாகும் ஞான உடம்பின் பயன், சுத்த மௌனத்தால் கிடைக்கும் ஆத்ம சாட்சாத்காரத்தை அடைவதே.

சித்த மௌனம் மனோவாக்கெலாம் மௌனம்
சுத்த மௌனத்தில் தோன்றும் பராபரமே

என்கிறார் தாயுமானவர்.

மோனம் என்பது ஞானவரம்பு.

உண்மையான மௌனம் எது என்பதை பகவானும் கூறுகிறார்.

*மௌனியாய்க் கல்போல் மலராது இருந்தால்*
*மௌனம் இதாமோ அருணாசலா.*

*(அக்ஷரமணமாலை, 87)*

வாயினால் மட்டும் பேசாது இருந்து, மனதில் தெளிவான ஆன்மிகம் மலராமல், கற்சிலை போன்று வாய்மூடி மட்டும் இருந்தால் அதை உண்மையான மௌனம் என்று கூறமுடியுமா? உள்ளே ஆழ்ந்த ஆத்ம அனுபவத்தின் மோனநிலையினை அனுபவிப்பதே சுத்த மௌனம் என்கிறார் பகவான்.

குறள் 89: **ஆதியோடு ஒன்றும் அறிவைப் பெறுவதுதான்**
**நீதியால் செய்த தவம்.**

**பொருள்:** தர்மத்தோடு இயைந்த தவத்தின் நோக்கம் ஆதியாகிய பரப் பிரம்மத்தோடு பேதமற்று ஒன்றுவதுதான்.

'தேவம் அக்ரமாஸூத்' ஆதியில் இருந்தது ப்ரம்மம் ஒன்றே என்று வேதம் கூறுகிறது.

*ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத்து உச்சியின் மேல்*
*அளியில் விளைந்ததோர் ஆனந்தத் தேனை அநாதியிலே*
*வெளியில் விளைந்த வெறும்பாழைப்பெற்ற வெறுந்தனியைத்*
*தெளிய விளம்பிய வாமுகம் ஆறுடைத் தேசிகனே!*

"ஆத்ம ஞானமாகிய ஜோதியின் உச்சியின் பிவிற்றும் ப்ரமானந்தமாகிய தேனை, ஆதியற்ற பரவெளியில் தோன்றிய பரவெளியாகிய தனித்துவத்தை எனக்கு விளக்கியவா" என்று வணங்குகிறார் அருணகிரி.

குறள் 90: **காடும் மலையும் கருதித் தவஞ்செய்தால்**
**கூடும் உணர்வின் பயன்.**

**பொருள்:** நேரடியாகப் பொருள் கொண்டால் வீட்டைவிட்டு நீங்கி, காட்டையும் மலையையும் கருதிச்

சென்று தவம் செய்தால் ஆத்மசாட்சாத்கார உணர்வு அடையப் பெறலாம் என்பதாம்.

சித்தாந்த பூர்வமாய் நோக்கும் இடத்து, காடு என்பது உடலில் உள்ள அஞ்ஞான தத்துவங்களையும், மலை என்பது பிரணவ மேருவையும் குறிக்கும். பிரணவ தத்துவத்தை அறியவும், அதை மறைக்கும் அஞ்ஞானத்தை நீக்கவும், உள்நோக்கினால் ஆத்மவிசாரம் செய்தால், நாம் செய்யும் சாதனையாகிய தவத்தின் பயன் வெளிப்பட்டு பிரகாசிக்கும்.

திருமூலர் இதனை எழிலுறக் கூறுகிறார்:

**விளைவு அறிவார் பண்டை மெய்த்தவம் செய்வார்**
**விளைவு அறிவார் பண்டை மெய் உரை செய்வார்**
**விளைவு அறிவார் பண்டை மெய் அறம் செய்வார்**
**விளைவு அறிவார் விண்ணின் மண்ணின் மிக்காரே.**

ஆத்ம சாதனை தீவிர சிரத்தைகொண்டு, அது சாட்சாத்காரத்தை அளிக்க வல்லது என்பதை அறிபவர்கள் நீண்ட தவத்தினை ஆற்றுவர். அவர்கள் ஞான நூல்களை ஆழ்ந்து பயில்வர். அவர்கள் அறத்தின் வழியே வினையாற்றுவர். அவர்கள் மண்ணுலக மாந்தரினும் விண்ணுலக தேவரினும் சிறந்தவர்கள் என்கிறார் திருமூலர்.

**ரமணோதயம்**

Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

# குருவே எல்லாமும்

## பேராசிரியர் K. சுப்ரஹ்மண்யன்

பகவானின் அஷ்டோத்திரத்தில் ‘ப$^4$வரோக$^3$ பி$^4$ஷக்$^3$’ என்னும் நாமம் வருகிறது. பிறப்பு இறப்பு என்னும் நோயைக் குணமாக்குபவன் என்று பகவான் போற்றப்படுகிறார். சங்கரரின் ‘பஜகோவிந்தம்’ இந்தப் பிறப்பு-இறப்புச் சுழலை எழிலுறக் குறிப்பிடுகிறது.

*புனரபி ஜனனம் புனரபி மரணம்*
*புனரபி ஜனனீ ஜடரே சயனம் ।*
*இஹ ஸம்ஸாரே பஹு துஸ்தாரே*
*க்ருபயா பாரே பாஹி முராரே ॥*

நாம் பிறக்கிறோம், இறக்கிறோம், மீண்டும் தாயின் கருப்பையில் குடிபுகுகிறோம். தொடரும் இந்த சுழற்சியே பவரோகம். சங்கரர் இந்த ஸம்ஸாரம் எனும் பெரும் கடலைக் கடக்க வழி தெரியவில்லை. இறைவனே! இதற்கு உன் பேரருள்தான் துணை செய்யவேண்டும் என்கிறார்.

சிற்சில சமயங்களில் நாம் வாழ்க்கை மிகவும் துன்பமயமாகி வருவதாகவும், இனி வாழ்தலில் அர்த்தமே இல்லை என்றும் எண்ணுகிறோம். அதிருஷ்டவசமாகவோ, அல்லது துரதிருஷ்டவசமாகவோ இந்த மனப்பான்மை வெகுநேரம் நீடிப்பதில்லை. இது நமக்குச் சலிப்பைத் தருகிறது. நாம் எவ்வளவு செல்வந்தராய் இருப்பினும் ஏதோ ஒரு சமயத்தில் எல்லோருக்கும் இந்தச் சலிப்புணர்வு வரும். அப்போது “போதும்! போதும்!

*[பகவானின் மிக உயர்ந்த பக்தரும், சிகர நிலைச் சாதகரும் ஆகிய Dr. K. சுப்ரஹ்மண்யனின் ஆங்கிலக் கட்டுரை, நமது ஆசிரியரால் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.]*

*இந்த பவரோக நோயைத் தாளவே முடியவில்லையே! என எண்ணுகிறோம். இந்த சமயங்களில்தான் பகவான் ‘ப$^4$வரோக$^3$ பி$^4$ஷக்$^3$’ பிறவி நோயைத் தீர்க்கும் வைத்தியன் என்பதை நினைவு கூறவேண்டும். அவர்தான் பிணிகள் அனைத்தையும் தீர்க்கவல்ல கைதேர்ந்த வைத்தியன். அடிக்கடி பிறப்பு-இறப்பு பற்றிக் கவலையுறுபவர்கள் பகவான் என்னும் மஹா வைத்தியர் இருப்பதை நினைவு கொள்ள வேண்டும். பகவானே கூறுகிறார்: “நீங்கள் உலக வாழ்க்கையில் துயர் படும்போது மிகவும் சலிப்புறுகிறீர்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும்போது, இந்தச் சலிப்பு காணாமல் போகிறது. நாம் மகிழ்ச்சியின்றி இருக்கும்போது காலம் மிக மெதுவாகச் செல்கிறது என்று எண்ணுகிறோம். நாம் மகிழ்வான மனநிலையில் இருக்கும்போது காலம் செல்வதையே நாம் உணர்வதில்லை. நாம் மிகவும் மிக விரும்பும் ஒருவருடன் இருக்கும்போது, காலம் செல்வதையே நாம் உணர்வதில்லை. நாம் விரும்பாத ஒருவருடன் நாம் கழிக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் ஒரு யுகம்போல் உணர்கிறோம். பௌதிக ரீதியில் ஆனநேரம் ஒரே மாதிரிதான் உள்ளது. ஆனால் நம் மனப்பாங்கின்படி காலப்போக்கு வேகமாகவோ, மெதுவாகவோ கழிகிறது.” பகவான் கூறுகிறார்: “நீ ஆரோக்யத்துடன் மகிழ்ச்சியாக இருக்கும்போது வைத்யரை நாடுவதில்லை. நீ மகிழ்ச்சியின்றி இருக்கும்போது அதற்கு ஒரு ஔஷதம் தேடுகின்றீர்கள்; மகிழ்ச்சியை நாடுகிறீர்கள். உண்மையில் ஆனந்தமே நமது உண்மையான நிலை. நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது, நம் உடலுணர்வு, மனம் அற்றுப் போகும்போது, இந்தப் பேரானந்தத்தை உணரலாம். இந்த ஆழ்ந்த உறக்கநிலை, மனம் மற்றும் உடலைக் கடந்த நிலை. எத்தகைய செயலையும் செய்யாமலேயே நாம் அப்போது ஆனந்தமாய் உள்ளோம். இது வெளியிலிருந்து வரும் மகிழ்வு நிலை அல்ல. இது*



உடல் பிரக்ஞை ஏதும் அற்றநிலை. எப்போதும் எது எதையோ தேடி அலைகின்ற மனம் அற்றநிலை. ஆழ்ந்த உறக்கத்தில் உடல்-மனம் இணைப்பு ஆத்மாவில் ஒன்றுகிறது. ஒரு வைத்யர் என்ன செய்கிறார்? உடல் ஆரோக்யத்தை நோயின் காரணத்தைக் கண்டுபிடித்து அதை அவர் நீக்குகிறார். நம் ஆரோக்யத்துக்குத் தடையாய் உள்ள ஒன்றை அவர் நீக்குகிறார். இந்தத் தடை நீங்கியபின் நாம் ஆரோக்யமாக உணர்கிறோம்."

குருவின் செயலும் அவ்வாறானதே. அவர் வெளியில் எங்கிருந்தோ ஞானத்தைக் கொணர்வதில்லை. நம்முடைய ஆனந்தத்திற்கும் தடையாய் உள்ளவற்றை அவர் நீக்குகிறார். "எப்போதும் ஆனந்தம் என்னும் ஜோதி எப்போதும் உள் இதயத்தே ஒளிர்ந்து கொண்டு உள்ளது" என்பது பகவான் வாக்கு. 'அஹம் அஹம் அதுவே தானாய் ஒளிர்ந்திடும் ஆத்மாவாக' என்பது பகவான் வாக்கு. அது எப்போதும் இடையறாது ஒளிர்ந்து கொண்டு இருந்தபோதும் நாம் ஆழ்ந்த உறக்கத்தில் மட்டுமே உணர்கிறோம். நாம் விழித்திருக்கும் மற்ற சமயங்களில் ஏதோ ஒன்று இந்த ஜோதியை

*மறைத்துக்கொண்டு உள்ளது. நாம் உறக்கத்தில் இருந்து எழுந்த மாத்திரத்தில், எண்ண அதிர்வுகளால் அலைக்கழிக்கப்படுகிறது. அது நமது உண்மை ஆனந்த ஸ்வரூபத்தை மறைக்கிறது. நமது மனம் மீண்டும் ஆத்மாவில் ஒடுங்கும்போது ஆழ்ந்த உறக்கத்தில் நாம் அதை மீண்டும் உணரத் துவங்குகிறோம்.*

*இந்த இறை உணர்வை நிரந்தரம் ஆக இறைவன் அருளையே வேண்டி, அதன் மூலமாக 'நாம் யார்' என்று அறியவேண்டும். அல்லது இறைவனிடம் நாம் பூரண சரணாகதி செய்யவேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு கடமை உள்ளது. அந்தக் கடமைதனை நாம் நம் முழுத் திறமையுடன் நிறைவேற்றி, அதற்குரிய பலனை இறைவனிடமே விட்டுவிடுங்கள். இவ்வாறு சொல்வது சிரமமான ஒன்றாகும். இந்த மனப்பாங்கை உள்வாங்குவது என்பது இன்னும் சிரமமானது. இதைக் கைக்கொள்வது இறைவன் அருளால் மட்டுமே முடியும். நாம் ஒரு மஹானைக் குரு என்று ஏற்றுக்கொள்ளும்போது நமக்குச் சிறிதும் புரிபடாத வகையில் அவர் நம்மையே முற்றிலும் மாற்றி விடுவார். பகவான் குரு, கடவுள், ஆத்மா, அருள் அனைவரும் ஒன்றே என்று கூறுகிறார். ஒரே பொருளின் வெவ்வேறு பெயரே அவை. நாம் அனைவரும் கூறும் சுலோகமாவது:*

*குரு ப்ரஹ்மா குருர் விஷ்ணு குருர்தேவோ மஹேஸ்வர:*
*குரு ஸாக்ஷாத் பரப்ரஹ்மா தஸ்மைஸ்ரீ குரவே நம:*

*இதன் பொருளாவது: குருவே ப்ரம்மா (உருவாக்கும் தெய்வம்). ஏனெனில் அவர் உன்னிலிருந்து ஒரு புதிய ஆத்மிக வழியை உருவாக்குகிறார். நான் குருவிடம் பூர்ண சரணாகதி செய்யும்போது அவர் என்னிலிருந்து ஒரு முற்றிலும் வ்யக்தியை உருவாக்குகிறார். வெளிப்படையாகப் பார்க்கும்போது, நான் முன்பிருந்த அதே வடிவில் தோன்றலாம். உண்மையில் நான் உள்ளூற முற்றிலும் மாறிவிட்ட ஒருவன் பகவான்*

வேங்கடராமனாக பதினாறு ஆண்டுகள் இருந்தார். இந்த வேங்கடராமன் எனும் இச்சிறுவன் வழக்கமான சிறுவர்களைப்போல விளையாட்டில் ஆர்வம்கொண்டு படிப்பில் அவ்வளவு கருத்துச் செல்லாமல் இருந்த ஒருவன். அவரது குருவான அருணாசலத்தின் வாயிலாக பேரருள் அவருள் பாய்ந்தபோது வேங்கடராமன் அக்கணமே பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியாய் உருவெடுத்தார். இந்த உண்மையை பகவானே அஷ்டோத்திரத்தின் கடைசியில் மந்திரத்தில் உறைக்கின்றார்.

தத்$^{3}$ தி$^{3}$வ்யானுக்$^{3}$ரஹ ஸுப்ரவாஹ விவஸஸ் தாதா$^{3}$த்ம்ய பா$^{4}$வம் க$^{3}$த:

ஸத்குரு அந்தச் சிறிகூனிடம் இருந்து ஒரு தெய்வீக மஹானை உருவெடுக்கச் செய்தார். அச்சிறுவனை புத்துரு எடுக்கச் செய்தபின், அந்நிலையில் மாற்றம் ஏதும் இல்லாமல் நீடிக்கச் செய்யும் விஷ்ணுவின் செயலையும் செய்கிறார். பகவான் மதுரை மாநகரில் இருந்து கையிலோ பையிலோ எதுவுமே இல்லாமல் அடுத்த வேளை உணவு எங்கே கிடைக்கும் என்றுகூடத் தெரியாமல் வந்தார். குரு அருணாசலர் பகவான் எப்படிப் புரக்கப்படவேண்டும் என்று எண்ணினாரோ, அவ்வாறே அவரைக் காத்தருளினார். நாம் எல்லோருமே நாம் சரணாகதி செய்தபின்னர் நாம் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என எண்ணுகிறோம். பகவான் முதலாய பல்வேறு ஞானிகளின் வாழ்க்கைச் சரிதத்தைப் பார்க்கும்போது அவர்கள் சரணாகதி செய்து விட்டபின், அவர்கள் என்பதே முற்றிலும் மறைந்து, 'இது வேண்டும், அது வேண்டும்' என்று கேட்க யாருமே இல்லை என்பதைக் காண்கிறோம். பகவான் தனது உணவிற்காக பிட்சை எடுக்க வேண்டியிருந்தது. அவருக்கு ஒரு உடல் துடைக்கத் துண்டோ, தலையணையோ எதுவுமே இல்லை. பல்லாண்டுகள் அவர் வெறும்

*தரையிலேயே படுத்து உறங்கினார். நம் நோக்கில் இருந்து பார்க்கும்போது அது ஒரு கடினமான வாழ்க்கை. பகவான் நோக்கிலோ அவர் மிகவும் சௌக்கியமாக இருந்தார். அவருக்கு இது தேவை என முறையீடு செய்ய வேண்டும் என்ற தேவையோ இல்லை. ஏனெனில் அவர் தேக உணர்வுக்கு அப்பாற்பட்ட நிலையில் இருந்தார்.*

*நாம் நமது தேகஉணர்வுடன் தேகத்தின் தேவையே முக்கியம் என்று கருதுவதால், நமது தேவைகள் பெருகுகின்றன. பகவானுக்கோ தேக உணர்வே இல்லை. இதுபோன்றே அவர் பல்லாண்டுகள் வாழ்ந்தார். அருணாசலர் அவரைப் பராமரித்தார். பகவான் அருணாசலத்தை வந்து அடைந்த தினத்தில் உணவின்றி ஆலயத்தைச் சுற்றி நடந்துகொண்டு இருந்தார். மறுநாள் அவரைக் கண்ட ஒரு சாது, இந்தச் சிறுவன் உணவு இன்றிவே இருக்கிறான் என்பதை அறிந்து, ஒரு துருப்பிடித்த தகரத்தில் தன்னிடம் எஞ்சி இருந்த உணவையும், சிறு ஊறுகாய் துண்டத்தினையும் பகவானிடம் அளித்தார். பகவான் அதை உண்டார். பல்லாண்டுகட்குப் பின் இதை நினைவுகூர்ந்த பகவான், “இதுவே நான் பெற்ற முதல் பிட்சை. அருணாசலன் எனக்கு அளித்தது. இவ்வளவு சுவையான உணவைப் பின்னர் எப்போதும் நான் உண்டதே இல்லை” என்று கூறினார். எது கிடைத்தாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளும் அத்தகு மனப்பாங்கை அருணாசலன் நமக்கு அளிக்கிறார். அக்ஷரமணமாலையில் பகவான் கூறுகிறார்: “வரும்படி சொல்லிலை! வந்தென் படியள! வருந்திடு உன் தலைவிதி, அருணாசலா!” இத்தகைய ஆன்மிகத் துணிவோடு நம்மில் யார் கூறமுடியும்? இத்தகு மனப்பாங்கை நம்முடைய கடவுளும், ஸத்குருவும்தான் நமக்கு அளிக்க முடியும். குரு நம்மைக் காக்கும் கடவுளாம் விஷ்ணுபோல் புரக்கிறார். அழிக்கும் கடவுள் பரமேஸ்வரன் சிவன் எதனை அழிக்கிறார்? நம்முள் குடிகொண்டுள்ள எல்லாத் தீமைகளையும்*

அவர் அழிக்கிறார். அதைவிட முக்கியமாக நம்முடைய நற்குணங்களை எல்லாம் நாமே வளர்த்துக் கொண்டோம் என்ற ஆணவ எண்ணத்தையும் அவர் அழிக்கிறார். நம்முள் உள்ள நற்பண்புகள் எல்லாம் நம் முயற்சியால் அல்லாது இறைவன் அருளால் வந்தவையே என்று அறியும்போது, தீயகுணங்கள் யாவையுமே நம்மிடம் இருந்து நீங்கிவிடுகின்றன. பகவான், “நீ என்னை உன் வசமாய்க்கொண்ட தருணத்தில், என் நற்குணங்கள் மற்றும் தீயகுணங்கள் எல்லாமே உன்னுள்ளேயே அடங்கி விடுகின்றன” என்று அருணாசலனிடம் கூறுகிறார். சிவன் என்ற ரூபத்தில் குரு நமது அஹங்காரத்தை அழிக்கிறார். எனவே ப்ரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் அவரே. அவரே நமது ஆத்மா.

# இனிவரும் திருநாட்கள்

## 2020

| | | | |
|---|---|---|---|
| *செப்டம்பர்* | 1 | *செவ்வாய்* | *பகவான் அருணையடைந்த தினம்* |
| *அக்டோபர்* | 17 | *சனி* | *நவராத்திரி விழா தொடக்கம்* |
| | 25 | *ஞாயிறு* | *சரஸ்வதிபூஜை* |
| | 26 | *திங்கள்* | *விஜயதசமி* |
| *நவம்பர்* | 14 | *சனி* | *தீபாவளி* |
| | 20 | *வெள்ளி* | *கார்த்திகை தீபோற்சவம் துவக்கம்* |
| | 29 | *ஞாயிறு* | *கார்த்திகை தீபம்* |
| *டிசம்பர்* | 31 | *வியாழன்* | *பகவானது 141ஆவது ஜயந்தி* |

# ஒன்றே ஒன்று*

## S. மஹாலக்ஷ்மி**

*ராகம் - பீலு*

*விருத்தம்*

*அன்பு, பண்பு, பரிவு, பணிவு, ஒழுக்கம், மோனம்*
*தனிமை, தியானமுமே ஸ்ரீரமண ஸாரம்*
*ஸ்ரீரமணரை சரணடைந்திடில் என்றும் உண்டு ஜயம்.*
*இன்று பயம்; இன்று பயம்.*

*ராகம் - பீலு*

*பல்லவி*

*ஒன்றே ஒன்று, அது ஸ்ரீரமணரெனும் ஒன்றே ஒன்று*
*என்றென்றும், எங்கெங்கிலுமுள்ள ஒரே பரம்பொருள் அது*
*(ஒன்றே ஒன்று)*

*அநுபல்லவி*

*நன்று ஆராய்ந்து "நான் யார்" என சென்றிடில் உள்ளே*
*ஒன்றிடும் உள்ளமந்த ஏக சொரூப ரமணரொடு*
*(ஒன்றே ஒன்று)*

*சரணம்*

*சென்றிடும் வாழ்க்கை இயல்பாய் ஊழ்வினை பயன்படியே*
*வென்றிடும் உயர் வீடுபேறு ஸ்ரீரமணானந்த வாழ்வதாலே*
*தோன்றிடினும் உலகிலோர் மர்ம நோயதன் கோரத்*
*தாண்டவம் அது ஓய்ந்து*
*நன்றே பொங்கிடும் சுபமங்களம் ஸ்ரீரமணர் அருளாலே*
*(ஒன்றே ஒன்று)*

---

*ஸ்ரீரமண பகவானின் எழுபதாவது (70) ஆராதனை தினமான 20/04/2020 அன்று இயற்றிய பாடல்.

**இவர் பேராசிரியர் K.சுவாமிநாதன் அவர்களின் மூத்த மகளாவார்.

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மூலம்: மௌனிசாது

## தமிழாக்கம்: ராம்மோஹன்

### 17. மேலும் ஒரு ரண சிகிச்சை

பகவானின் திருக்கரத்தில் வளர்ந்து வரும் புற்றுக் கட்டியை அகற்ற மீண்டும் ஓர் அறுவை சிகிச்சை செய்யப் போவதாய் ஆச்ரம வட்டாரத்தில் வதந்திகள் உலாவிக் கொண்டு இருந்தன. கட்டியின் வளர்ச்சி மிக வேகமாகவும் அச்சுறுத்துவதாகவும் பகவானின் உடலை மிகவும் பலஹீனப்படுத்துவதாகவும் இருந்தது கண்டு அனைவரும் அஞ்சினர். நேற்று இரவு மருத்துவ உபகரணங்கள் நிரம்பிய பைகளுடன் நிறைய மருத்துவர்கள் சென்னையிலிருந்து வந்தனர். அவர்கள் மாலை வேளை தியானத்தில் அமர்ந்தனர். அன்னை ஆலயத்தை விட்டு நீங்கு முன்னர் பகவானுடன் சில வார்த்தைகள் பேசி விட்டுச் சென்றனர்.

இன்று பகவான் தனது வழக்கமான இடத்தில் காணப்படவில்லை. ஆச்ரம அலுவலர்கள் ரண சிகிச்சை மறுநாள் மதிய வேளையில் நடக்க இருப்பதாகக் கூறினர்.

ஆச்ரமத்தில் இருந்த மேலை நாட்டவர் அனைவரும் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் காணப்பட்டனர். சிலர் ஆலயத்தில் சுற்றி இடையறாது வலம் வந்தனர். மேலும் சிலர், ரண சிகிச்சை நடந்து கொண்டிருக்கும் வைத்யசாலை அருகில் போவதும், வருவதுமாக இருந்தனர்.

*மாலை வேளையில் ரண சிகிச்சை முடிந்து விட்டதாக நாங்கள் அறிய வந்தோம். பகவான் மிகவும் பலஹீனமாக இருந்ததால் வைத்தியசாலையை விட்டு வெளியே வர இயலவில்லை. சில நேரம் கழித்து பகவான் வைத்தியசாலையில் தாழ்வாரத்தில் மருத்துவர்களும் ஆச்ரம ஊழியர்களும் சூழ ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவர் அருகாமையில் பகவானின் தரிசனம் பெற ஒரு நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர். ஒருவர்பின் ஒருவராக அவர்கள் பகவான் அருகில் வந்து மௌனமாக சில படிகள் ஏறி, பகவானை அடைந்து, வணங்கி, பின் கீழிறங்கிச் சென்றனர்.*

*நான் அப்போது அங்கிருக்கவில்லை. நான் ஆலயம் சென்று எனது வழக்கமான இடத்தில் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்தேன். வார்த்தைகளைக் காட்டிலும் செறிவுமிக்க அந்த ஆழ்ந்த மௌனம் தரும் சாந்தி உணர்வில், எண்ணங்களோ, மனச் சித்திரங்களோ, எதுவுமே எழவில்லை. இந்த ஆழ்ந்த மௌனத்தின் சாந்தம் எத்தகு வலிமை படைத்தது! அது காலத்தின் எல்லையையும், மனத்தின் கட்டுக்களையும் கடந்த மாபெரும் சக்தி. இந்த ஆழ்ந்த அமைதியை நம் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. ஏனெனில், எண்ணம் எனும் பொருள் கொண்டு இந்த ஆழ்ந்த மௌனத்தினைத் தொடரும் நமக்குத் துணிவில்லை. மிக நேரம் கழிந்த பின்னரே, வார்த்தைகள் வெளிப்படத் துவங்குகின்றன.*

*எனவேதான் இந்த மௌன அனுபவம் கழிந்த சில மணி நேரத்திற்குப் பின்தான் இந்தப் பக்கங்களை நான் எழுத இயலுகிறது. வழக்கமாக பகல் உணவு முடிந்த பின்னரே அனைவரும் ஒய்வெடுக்கச் செல்வர். ஆச்ரமத்தின் இயக்கம் அனைத்தும் இடை நிறுத்தப்பட்டிருக்கும். ஆலய வளாகத்திலும்*

யாரும் இருக்க மாட்டார்கள். அனைவரும் உச்சி வேளையிலிருந்து மூன்று மணிவரை தூங்கச் செல்வர். ஆனால் நான் இச்சமயத்தில்தான் விழித்திருந்து, எழுதுதலைத் தொடர்வேன். உலகில் பல்வேறு இடங்களில் இருந்து எனக்கு வரும் கடிதங்களுள், பல்வேறு மொழிகளில் எழுதப்படும் பல்வேறு எண்ண ஓட்டங்கள், பல்வேறு நிலைகளிலிருந்து எழுப்பப்படும் வினாக்கள் அனைத்திற்கும் இச்சமயம்தான் நான் பதிலளிக்கும் நேரம்.

திருவண்ணாமலை நகரின் அதீதமான வெப்பம் எல்லா பௌதிகச் செயல்களையும் தாமதமாக்கும். ஆயின் மனம் கடந்த உணர்வுகள் இந்த வெப்பத்தால் பாதிக்கப்படுவதில்லை. எனது மனம் வழக்கம் போலவே இயங்குகின்றது. நான் கடிதங்கள் எழுதுவதை முடித்த பின்னர், சாமான்யரின் அறிதலுக்காக நான் எழுதிக் கொண்டிருக்கும் இந்தியாவிலிருந்து நினைவுகள் நூலின் சில பக்கங்களையோ, அல்லது எனது நாட் குறிப்பையோ பூர்த்தி செய்ய முயல்வேன். இந்த நூலை எழுதுவதில் எனக்கு பெரு விருப்பம் ஒன்றும் இல்லை. உற்சாகம் ஏதுமின்றிதான் இதை நான் எழுதிக் கொண்டு இருக்கிறேன். அதைப்படிக்கும் சிலர் இது ஒரு பலனற்ற வேலை என்று எண்ணலாம். வேறு சிலர் இது ஒரு மிகைப்படக் கூறும் நூல் என எண்ணலாம். சிலரோ இது நடுநிலை தவறி, ஓரம் சார்ந்த நூல் என எண்ணலாம். நான் இதற்கு என்ன செய்ய முடியும்?

ரண சிகிச்சை முடிந்த சில நாட்களுக்குப் பின்னர், பகவான் ஆலயக் கூடத்திற்கு மீண்டும் வரத் தொடங்கினார். முதல் சில நாட்கள் சில மணி நேரங்கள் மட்டுமே இருந்தார். இந்தக் கால அளவை சிறிது சிறிதாக அதிகரித்து சில நாட்களுக்குப் பின்னர் வழக்கமான கால அளவையில் இருக்கலானார்.

மாணவர்களும், ஆர்வலர்களும் பல்வேறு இடங்களிலிருந்து பகவானின் இறுதி தரிசனம் பெற வந்துள்ளனர். இந்தியர்களும், வெளிநாட்டவர்களும் இங்கு வந்து நிரம்பி உள்ளனர். அவருள் பெரும்பாலானவர் ஒரு சில நாட்களே தங்க வந்துள்ள முதியவர்கள். அவருள் சிலர் மிகத் தீவிரமான பக்தர்கள். வேறு சிலரோ வேடிக்கை பார்க்க வந்திருக்கலாம்.

பகவானின் பல ஆண்டுகள் பக்தரான யோகி ராமையா இரண்டு மாதங்களாகவே ஆச்ரமத்தில் தங்கி உள்ளார். ஒவ்வொரு காலையும், மாலையும் அவர் பகவானின் திருவடிக் கீழேயே அமர்ந்து உள்ளார். ஒரு வார்த்தையும் பேசாமல், எந்த உணர்ச்சி களையும் வெளிப்படுத்தாமல், தன்னுடைய வெள்ளை ஆடையுடன் அவர் அமைதியாக அசையாமல் அமர்ந்து உள்ளார்.

ரண சிகிச்சைக்குப் பின் பகவான் உடல் மெலிந்து இருந்தாலும், அவர் உடல் நிலையில் சிறிது முன்னேற்றம் காணப்படுகிறது. இதைக் கண்ணுற்ற பக்தர்கள் உள்ளத்தில் நன் நம்பிக்கை உதயமாகிறது. சிலர் ஓர் அதிசயம் நிகழும் என எதிர்பார்க்கின்றனர். வேறு சிலர் இந்தப் புதிய சிகிச்சை முறையினால் முன்னேற்றம் ஏற்படலாம் என எண்ணுகின்றனர்.

நான் எதிர்காலத்தில் என்ன நிகழும் என்று எதிர்பார்ப்பதில்லை. நான் நிகழ்காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எதிர்காலத்தில் பகவான் என்னுடன் இருக்க மாட்டார் என்ற தூய எண்ணத்தை உள்ளத்திலேயே பூட்டி வைத்துள்ளேன். பகவானின் பௌதிகம் மட்டுமே என்னை விட்டு நீங்கும். அவரது ஆத்மிக பேரொளி என்றும் நீங்காது இருக்கும். எனினும் பொது பௌதிக உடலினை இறுதியாகக் கண்டு கொண்டு இருக்கிறேன் என்ற சோக உணர்வு என்னைக் கவ்வுகிறது.

(தொடரும்)



# அசலமாம் ஔஷதம்

**சேலம் சேதுகுமாரன்**

பகவானின் அடியார்கள் தாம் பிக்ஷை எடுக்கும்போது பாடிச் செல்ல ஒரு துதி இயற்றுமாறு பகவானை வேண்டினர். பகவான் அதற்கு இசைவு ஏதும் கூறவில்லை. ஒருநாள் கிரிப் பிரதக்ஷிணம் செய்யத் தொடங்கியபோது, அன்பர் ஒருவர் காகிதமும் எழுதுகோலும் எடுத்துக்கொண்டு பின் தொடர்ந்தார். அக்கணமே இறையருளால் அறிவறு சிறுவயது முதல் அவர் உள்ளத்தே மலர்ந்து இருந்த அருணாசல துதி துவங்கியது. அருணாசலத்தின் சாரலில், அமைதி ததும்பும் ஏகாந்தத்தில் அருணாசலனுக்கும் ரமண நாயகிக்கும் இடைய முகிழ்ந்த பேரன்பு பொங்கும் அருள் பக்திக் காவியமாம் ‘அக்ஷர மணமாலை’ நிகழ்ந்தது. இந்தப்

பாக்களின் பொருள் என்ன என்று வினவியபோது, "ஏதாவது நினைத்து எழுதி இருந்தால்தானே பொருள் கூற முடியும்? எதிர்பாராதவிதமாக எப்படியோ எழுந்த பாக்கள் இவை. நானும் அவற்றின் பொருளை ஆலோசித்துதான் சொல்ல வேண்டும்" என்றார் பகவான். இது பகவானின் ஸகஜ சமாதி நிலையின் வெளிப்பாடாகும்.

பார்வைக்கு எளிய மனித ரூபத்துடன், பழகுதற்கு இனிய தோழராய், தரத்தில் கடவுளாய், தன்னில் தான் ஒன்றிய தவச் சுடராய் விளங்குவது பகவான் ரமணர். அவர் அருளிய ஒப்பற்ற அருட் காவியம் அக்ஷரமணமாலை. இதன் சிறப்புகள் எண்ணற்றவை. இதன் எளிமையான பத அமைப்பு, ஒன்றரை அடியில் உயர்ந்த கருத்துக்களை விளக்கும் சொல்லமைப்பு, கருத்தாழம், ஓசை நயம் அனைத்தும் ஒருங்கே அமைந்த ஒப்பற்ற படைப்பு இது.

அக்ஷரமணமாலையின் சிறப்பு அதன் எளிமை, பதங்களின் அமைப்பு, மற்றும் ஆழ்ந்த பொருளமைதி. அருணாசலம் தன்னைத்தானே பாடிக் கொண்ட அருட் காவியமே அக்ஷரமணமாலை. பகவானிடம் அன்பர்கள் மீண்டும் மீண்டும் அக்ஷரமணமாலைக்குப் பொருள் கூறுமாறு வேண்டியபோது, "அதற்கு அர்த்தம் அதனைப் பாராயணம் செய்வதுதான்" என்று கூறி விட்டார்.

எக்காலத்தைக் காட்டிலும் இக்காலத்தில் அருணாசல அக்ஷரமணமாலையைப் பாராயணம் செய்வது சாலச் சிறந்தது. எத்தகைய சிகிச்சை முறைக்கும் மருந்துக்கும் பிடிபடாது உலகையே மிரட்டிக் கொண்டிருக்கும் கொரோனா நுண்ணுயிரால் தாக்கப்பட்ட மனித இனத்தைக் குணமாக்கும் மருந்து அக்ஷரமணமாலை பாராயணமே. பகவானே இதைத் தெளிவுற அக்ஷரமணமாலை பாடலில், 'அருமருந்து ஆகிய அருணாசலா' என்று குறிப்பிடுகிறார்.

*மலை மருந்திடநீ மலைத்திடவோ அருள்*
*மலை மருந்தாய்ஒளிர் அருணாசலா*

*- அக்ஷரமணமாலை 76*

அருணாசலா! எல்லா நோய்களையும் தீர்த்து பூரண குணம் தரும் அருமருந்து நீயே அல்லவா!

பொருள்: நோய்க்கெல்லாம் பெரிய நோயாகிய அஞ்ஞானம் என்னும் பிணிக்கு, பேரறிவு என்னும் மருந்தைத் தந்து குணமாக்கினாய் அல்லவா? ஒருதரம் நீ அன்புடன் அளிக்கும் அரு மருந்தை உட்கொண்ட பின் நான் மீண்டும் நோய் வசப்படுவேனோ? (மாட்டேன்). நோய் அனைத்தையும் தீர்த்து பூரண குணம் ஆக்கும் அரு மருந்தாகிய அருணகிரியாக நீ என் எதிரில் ஒளிர்கின்றாய் அல்லவா?

பகவான் தரும் மலைமருந்து ஓர் அற்புதப் பிரயோகம். 'மலை மருந்து' என்ற சொல்லை மலைக்க வைக்கும் குழப்பமாகிய நோய்க்கான மருந்து என்றும் பொருள் கொள்ளலாம். மலை என்னும் தோற்றம் கொண்டு வந்துள்ள இந்த அருமருந்து, உடல்நோய் முதல் மாயை மயக்கம்வரை அனைத்தையும் தீர்க்கும் சக்தி வாய்ந்த அருள் மருந்து.

இந்தக் கண்ணியை வேறு ஒரு விதமாகவும் பொருள் கொள்ளலாம். 'அருணாசலம் என்னும் ஞான மருந்தே! என்னுடைய மதி மயக்கம் கண்டும், ஏன் தயங்கிக் கொண்டு மலையாய் அசையாமல் நிற்கிறாய்? அதை விடுத்து, உடனே விரைந்து வந்து யாவற்றிற்கும் குணம் அளிக்கும் அருள் மருந்தினை தருவாய்' என்பது மற்றொரு பொருள்.

மேலும் ஒரு பொருளாவது, 'மலையின் மகளான அருள் தரும் அன்னை உமை உனது இடப்பாகமாக, நிலைபெற்றிருக்கும்போது எனக்கு ஏதேனும் பிணிபடும் வாய்ப்பே இல்லை. நீ எப்போதும் என் இதயத்தில் ஒளிர்வாய்' என்பதாகும்.

இங்ஙனம் அருணாசலம் நோய் தீர்க்கும் அரு மருந்தாக ஒளிர்வதை அருணாசல பதிகம் பதினோராம் பாடலிலும் பகவான் கூறுகிறார்.

*அருமருந்து ஒன்று உண்டு அவனியில்*
*இதுதான் அருண மாதிரம்என அறிவீர்*

பகவான் வழக்கமாக ஒலிக்கும் மௌன முரசு அக்ஷரமணமாலை மூலம் அதிர ஒலிக்கின்றது.

நாக்கு மட்டுமா மௌனம் காக்க வேண்டும்? மனமும் மௌனமாக வேண்டும். ஆசாரங்களும், வெளிச் செயல்களும் நற்பலனைத் தரலாம். ஆனால் அவையே முடிவல்ல.

*மௌனியாய் கற்போல் மலராது இருந்தால்*
*மௌனம் இது ஆமோ! அருணாசலா!*

- அக்ஷரமணமாலை 87

எல்லா அனுஷ்டானங்களுமே ஆர்ப்பரிக்கும் மனத்தைக் கட்டுக்குக் கொண்டு வரும் தன்மை படைத்தனவாய் அமைதல் அவசியம். இதை பகவான் ஓர் அழகான பதத்தில் குறிப்பிடுகிறார். மனத்தைக் கட்டுப் படுத்தல் என்பது ஆரம்ப நிலை, அதை மலரச் செய்தல் என்பது பேரின்ப நிலை. அந்த நிலை அடையும்வரை மனதை வெறும் கல்போல் வைத்திருப்பது பயனற்றது.

பற்றுக்களால் பீடிக்கப்பட்ட மனம் பேரறிவை அடைய முயற்சி கூடச் செய்யாமல் இருக்கும் இந்த ஆசைகள் நிறைந்த மனத்தை, சிறிது நேரத்தில் வாடும் தன்மை வாய்ந்த மலரினைப் போன்றது என்கிறார் பகவான். இத்தகைய வாடும் தன்மை வாய்ந்த குணத்தை விட்டு, அழியாத பூரண மனத்தை எனக்கு அருள்வாய் என்று அக்ஷரமணமாலை பாடல் 69 இல் அருணாசலத்திடம் வேண்டுகிறார்.

*பூமண மாமனம் பூரண மணம் கொளப்*
*பூரணமணம் அருள் அருணாசலா*

தற்காலிகமான பூ மணத்திலிருந்து நிரந்தரமான பூரண நிலையை அடைவதே அக்ஷரமணமாலையின் நோக்கம். அழிவற்ற இந்நிலையை அடைபவர் எங்கும் பரம்பொருளையே காண்கின்றனர்.

அக்ஷரமணமாலையின் தனிச் சிறப்பு அது. என் செய்து உய்வது என்ற குழப்பத்தில் சிக்கி உள்ள கலிகாலத்திற்குச் சரியான வழிகாட்டுவதாகும். அதுவே பூரணமான சரணாகதி வழி. பக்தனிடம் கடவுள் ஞானத்தையோ தவத்தையோ கூட கலிகாலத்தில் வேண்டுவதில்லை. பக்தன் முழு முனைப்புடன் சரணாகதி செய்தால் அதை இறைவன் ஏற்றுக் கொள்கிறான். இதையே அக்ஷரமணமாலை வேண்டுகிறது. எது எனக்கு நல்லது, எது தீயது என்று எனக்கு வரையறுக்கத் தெரியாது. நீயே எது எனக்கு நல்லது மற்றும் எது எனக்குத் தீயது என்று தேர்வு செய். நல்லதை அருள்; மற்றதை நீக்கு என்கிறார் பகவான்.

*புல்லறிவுஏது உரை; நல்லறிவுஏது உரை*
*புல்லிடவே அருள் அருணாசலா*

- *அக்ஷரமணமாலை 68*

புல்லறிவு அற்பமானது; அழியக்கூடியது; துன்பம் தருவது இந்த அற்பமான அறிவு புலன்களைத் தூண்டிவிட்டு ஆசை என்னும் தீயைக் கிளறி விடுகிறது. எத்தனை விறகைப் போட்டாலும் தீ மேலும் மேலும் கொழுந்து விட்டு எரிவதுபோல நம் மனமும் எத்தனை ஆசைகளைப் பூர்த்தி செய்தாலும் அந்தப் பாசவலையிலே உழன்று கொண்டிருக்கிறது. இந்தப் புல்லறிவைப் போக்க வல்லது இறைவனிடம் நாம் காட்டும் பூரண பக்தியே.

# அக்ஷர மணமாலை – ஒரு தத்துவக் கருவூலம்

**டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்**

**பகுதி-19**

ஆண்டவனின் மெய்யடியார்கள் உலகியல் இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். லௌகீக வாழ்வின் வெற்றி தோல்விகள் அவர்களைப் பாதிப்பதில்லை. ஆனால் இறைவனுடன் அவர்கள் கொண்ட பிரத்யேக உறவில் பிரிவும், துயரமும், தன்னிரக்கமும் ஏன் கோபதாபங்களும் கூட அடிக்கடி நிகழும். அதனால், அவன் அருளுக்குப் பாத்திரமான மிகச் சிறந்த அடியார்கள் பலரும்கூட, இறைவனிடம் மன்றாடிக் கெஞ்சிக் கதறும் பாங்கினைப் பல இடங்களிலும் பார்க்கிறோம். தன்னுடைய எல்லா செயல்களையும் இறைவனுக்கே என்று அர்ப்பணித்து விட்டவர்களுக்கு, இந்த இயலாமை ஏன் என்ற கேள்வி எழுகிறது. ஆனால் இதை, 'நான் செயலாற்றுபவன் அல்ல; நான் அசக்தன்; நீயே வந்து வேறு கதியற்ற என்னைக் காக்க வேண்டும்' என்னும் உன்னத பராதீன நிலையாகவே பக்தி மார்க்கம் பார்க்கிறது. இந்நிலையில் இத்தகைய உணர்ச்சிகள் நம்மைப் புனிதப்படுத்துகின்றன.

இராமலிங்க அடிகளார் இறைவனிடம் தன்னுடைய அறியாமை மற்றும் இயலாமையை மிக அழகாக 'முறையீடு' என்னும் பதிகத்தில் நம் பொருட்டு அமைத்துத் தருகிறார். 'நான் இறைவன் திருவடியை அடையக் கூடிய அரு மருந்தை அறியமாட்டேன்;

*அவனைக் குறித்த தோத்திரங்களை அறியேன்; எனக்கு நல்லறிவும் இல்லை; வாழ்வின் விதி அறியேன்; அதன் நிலை தெரியாதவன்; இறைவனின் லீலைகளை அறியேன்; சான்றோரை அணுகி அவர்தம் பெருமையை அறியவும் நானறியேன்.' என்று பலவாறு புலம்புகின்றார். இந்தப் பதிகங்கள் அனைத்திலும் ஈற்றடியாக 'எங்கனம் நான் புகுவேன்? யார்க்குரைப்பேன்? என்ன செய்வேன்? ஏதும் அறிந்திலனே' என்ற அங்கலாய்ப்பு பதிவாகிறது. (முறையீடு 1).*

*தொடர்ந்து தன்னுடைய மனோ நிலையை வெளிப்படுத்தும் அடிகளார் பாடலில் மற்றொரு காட்சியை பார்க்கிறோம். 'நான் உன்னை மறக்க மாட்டேன். மறந்தால் அந்தக் கணத்திலேயே என் உயிரை விட்டுவிடுவேன். இது உன் மீது ஆணை. ஒருவேளை நீ என்னை மறந்து விடுவாயோ? அவ்வாறு நீ மறந்து விட்டால் என்ன செய்வேன்? எங்குறுவேன்? எவர்க்குரைப்பேன்? தாய் போன்று கருணை படைத்தவன் நீ. ஒருக்கால் நீ என்னை மறந்தாலும், உலகப் புகழ்பெற்ற உன்னுடைய கருணை என்னை மறக்காது என்ற எண்ணத்தில் நான் மகிழ்வுடன் இருக்கிறேன்.' ('பிரியேனென்றால்').*

*இது அன்பர்கள் வாழ்வில் சில சமயங்களில் நேரிடக் கூடிய ஒரு மன நெகிழ்ச்சி. இறைவனை அடையும் வழி தெரியாமல் அவர்கள் புலம்பும் கதறல் இவ்வாறு வெளிப்படுகிறது. இதைப் பற்றி விவரிக்கும் பலர் இத்தகைய வரிகள் நம்மைப்போன்ற சாதாரண ஜீவன்களின் பொருட்டே இத்தகைய சித்தபுருஷர்களால் எழுதப்பட்டது என்ற கருத்தையும் முன்வைக்கின்றனர். இதேபோல ஆதிசங்கரரும் திருச்செந்தூர் முருகன் சன்னதியில் 'கிம் கரோமி? க்வ யாமி?' (என்ன செய்வேன்? எங்குச் செல்வேன்?)' என்று தன்னுடைய*

*குழப்பத்தை வெளிப்படுத்துகிறார். இது ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் அனைவருக்கும் நேரிடக் கூடிய ஒரு அனுபவம். இதே போன்ற ஒரு கருத்தை அக்ஷர மணிமாலையிலும் ரமணர் அமைக்கிறார்.*

*கேளாது அளிக்கும் உன் கேடு இல் புகழைக்*
*கேடு செய்யாது அருள் அருணாசலா. (பாடல் 22)*

*'அருணாசலத்துறையும் ஈசன் பக்தர்கள் கேளாமலேயே அவர்கள் விருப்பத்தை பூர்த்தி செய்யும் கேண்மை படைத்தவன். ஆனால் இப்பொழுது நீ எனக்கு அருளாவிடில் அந்தப் புகழுக்கு பங்கம் வந்துவிடும். அதைத் தவிர்க்க எனக்கு அருள் செய்து உன் புகழைத் தக்கவைத்துக்கொள்' என்று ஒரு எச்சரிக்கை தொனியில் பேசுகிறார் மஹரிஷி. இதில் முன்பு பார்த்த இராமலிங்க அடிகளாரின் பாடலின் வேறொரு கோணத்தைக் காணலாம். இதுவும் ஒருவகை இயலாமை. அவன் அருளுக்குக் கையேந்தும் நிலை. கேளாது அளிப்பது என்பது ஒருவித தெய்வீக நிலை. கேட்டபின் அளிப்பது மானுஷ்யமான செயல்; கேட்ட பின்னரும் மறுப்பது ஆசுர சம்பத். ரமணர் அநுபவிப்பது இந்தத் தெய்விக அருளையே.*

*திருவாசகத்தின் 'திருச்சதகம்' என்னும் திருப்பதிகத்தில் ஒரு பக்தனின் மனக் குமுறலைப் பார்க்கிறோம். இந்த பக்தன் இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டுவிட்டான். அவருக்கு அடியவன் ஆகிறான். ஆயினும் இறைவனுடைய இயல்பை முழுவதாக அறியமுடியவில்லை. அது இறைவன் ஒருவனாலேயே அறியக்கூடியது. இந்த நிலையில் பெரும் குழப்பத்தில் ஆழ்கிறான் அந்த அன்பன். 'என் தலைவனே நீ என்னை ஆட்கொண்டாய். நானோ அதமன். என்னைக் கை விட்டால் எனக்கு உன்னையன்றி வேறு கதி கிடையாது. ஆகையால் உன்னுடைய சொரூபத்தை நீயே எனக்கு காட்டிக்கொடு' என்று இறைஞ்சுகிறான்.*

*தன்மை பிறரால் அறியாத தலைவா பொல்லா நாயான*
*புன்மையேனை ஆண்டு ஐயா புறமே போக விடுவாயோ*
*என்னை நோக்குவார் யாரே என் நான் செய்கேன்*
*எம்பெருமான்*
*பொன்னே திகழும் திருமேனி எந்தாய் எங்குப்*
*புகுவேனே*

*- (திருச்சதகம், அநுபோக சுத்தி 59)*

*பக்தனின் கையாலாகாத தன்மை, 'என்னை நோக்குவார் யாரே என் நான் செய்கேன்.... எங்குப் புகுவேனே' என்ற வரிகளில் புலனாகிறது. சங்கரரின் மனப்பாங்கும் இவ்வாறே இருப்பதை முன்பு கண்டோம்.*

*காலத்தால் சற்று முன்னோக்கி வருவோம். சமீபகாலத்தில் வாழ்ந்த உயர்ந்த சிவபக்தர் ஸ்ரீதர வேங்கடேசார்யார். இவர் தமிழ்நாட்டில் திருவிசைநல்லூர் என்னும் சிவத்தலத்தில், உன்னத ஆன்மீகப் பாதையிலேயே வாழ்ந்து வந்தவர். ஒருமுறை தந்தையின் திதி தினத்தன்று இவர், பசித்து வந்த ஒருவனுக்கு முன்னோருக்குப் படைக்க வைத்திருந்த உணவை முதலில் அளித்து விடுகிறார். அதை மற்ற வைதிக அந்தணர்கள் கண்டிக்கிறார்கள். அவர் காசிக்குச் சென்று கங்கையில் நீராடி வந்தால்தான்தான், அங்குத் தர்ப்பண காரியத்தில் பங்கு கொள்வோம் என்று கண்டிப்பாகச் சொல்லி விடுகிறார்கள். அச்சமயம் அவருடைய உன்னதமான சிவ பக்தியைப் பாராட்டி கங்கை நதியே அவர் வீட்டுக் கிணற்றிலிருந்து பிரவாகமாக வந்தது என்பது சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த வரலாறு. இத்தகைய உயர்ந்த பரோபகார சிந்தனை படைத்த பக்தரேகூட இறைவனின் முன் நின்று 'நான் உன்னை அடைய முடியாமல் புலம்புகிறேன்; என்னை காப்பாற்று' என்று கதறி அழும் உணர்ச்சியை 'ஆர்த்திஹர ஸ்தோத்திரம்' என்ற நூலில் பார்க்கலாம். இதிலிருந்து சில சுலோகங்களின் விளக்கம்.*

*'பாபியாகிய நான் துன்பங்களை அனுபவிப்பது தவறு அன்று; அது சரியானதே. இருப்பினும் உனக்கு நான் அடியவன் ஆவேன். அதனால் நான் துன்பங்களை அனுபவித்தால் அது உன் பெருமைக்கு ஏற்றதல்ல.' (சுலோகம் 2).*

இதுவே ரமணர் சொல்லுவதும்கூட. ('உன் கேடில் புகழைக் கேடு செய்யாது' — அக்ஷரமணமாலை). 'என்னுடைய குணத்தால் உன்னை நான் அடைய இயலாது; உன்னுடைய உயர் குணத்தால் என்னைக் காக்க வேண்டும்' என்பதே பக்தனின் பிரார்த்தனை.

'இறைவனை நினைப்பவரை நினைத்தவர்களுக்கு கூட துன்பம் இல்லாமல் காப்பாற்றுகிறாயே. 'சிவபெருமானே என்னைக் காப்பாற்று என்று கதறி அழுத போதிலும் துன்பத்தையே அடைகிறேன் இது உனக்குத் தகுமோ?' (கிம் உசிதம்-3)

'அனைவரது உள்ளத்திலும் உறையும் அந்தர்யாமியாகிய நீ என் உட்புகுந்து என்னைப் பாவங்களைச் செய்யத் தூண்டி விடுகிறாய்; பிறகு அதன் பயனாகத் துக்கத்தை அளிக்கிறாய். உன்னுடைய கருணை வளையத்தில் இருக்கும் நான் இது பற்றி என்ன சொல்ல முடியும்?' (கிம் ப்ரூயாம் க்ருபைகபாத்ரம் அஹம் 4). என்னுடைய எல்லாச் செயல்களுக்கும் நீயே காரணம். அதனால் நான் பாவம் செய்தாலும் அது உன்னையே சாரும்' என்பது உண்மையான அடியாரின் வாதம். இதுவே சரணாகதியின் உயர்ந்த லக்ஷணம்.

'மூடர் கூட்டத்தின் தலைவனான என்னிடம் உன் தயையைக் காட்டுதல் இயலாதுதான். ஆயினும் எனக்கு ஒரு சக்தி இருக்கிறது. என்னுடைய பலவீனமே அது. உன் தயையை என்பால் இழுக்கக்கூடிய சக்தி படைத்தது என் இயலாமையே. இதைக் கருத்தில் கொண்டு என்னைத் தேற்றிக் கொள்கிறேன். (மத்தைன்யமிதி சமாஸ்வசிமி-5)

இதில் பக்தியின் ஒரு புதிய கோணத்தைப் பார்க்கிறோம். 'நான் உன்னிடம் பக்தி செய்தேன், உன்னைச் சரணடைந்தேன். அதனால் என்னைக் காப்பாற்று' என்ற விண்ணப்பம் பலராலும் செய்யப்பட்ட ஒன்று. ஆனால் இங்கே இந்த எளிய பக்தர் 'என்னிடம் எந்தத் தகுதியும் இல்லை. நான் குணங்கள் அற்றவன் என்ற தீனமான இந்த நிலையே உன்னை என் பால் இழுக்கும் வல்லமை படைத்தது' என்ற இந்த வாதம் நமக்குப் புதியது. அதுமட்டுமல்ல. இந்த உலக வாழ்க்கையில் உழன்று திரிந்து பாவத்தையே சம்பாதித்து புகலிடம் அற்று நாளை வெட்டியாகக் கழிக்கும் நம் போன்றவர்களுக்கு, இந்த அடியவனின் புலம்பல் இருளில் தோன்றும் ஒளி விளக்காக அமைந்திருக்கிறது.

இந்த ஸ்தோத்திரத்தின் இறுதியில் இவர் சொல்கிறார், 'சிவனைச் சரணமாக அடைந்தால், அவர் உன் துன்பங்களை விலக்குவார் என்ற ஆன்றோர்களின் சொற்களால் உன்னைப் புகலாக அடைந்திருக்கிறேன். நான் தோஷங்கள் உடையவன். இருப்பினும் அந்தச் சான்றோர்களின்பால் உனக்கு மிகவும் பரிவு உண்டு. அந்த பக்ஷபாதத்தினால் என்னைக் காப்பாற்ற வேண்டும்.' (சரணம் கதோஸ்மி பாலய கலமபி தேஷ்வீஸ பக்ஷபாதான்மாம்-9). இறைவனுக்குத் தன்னை வணங்கும் பக்தனைவிட சிவனடியார்களைப் பணிந்து சேவை புரியும் தொண்டர்களிடம் பிரியம் அதிகம். அதையே 'பக்ஷபாதம்' என்கிறார். ஆகையால் சிவனடியார்கள் சொன்ன பாதையில் சென்றால், தன் அடியார் சென்ற வழி என்னும் பக்ஷபாதத்தால் இறைவன் கருணை செய்ய வேண்டும் என்னும் கட்டாயத்துள் செலுத்தப்படுவான் என்பது இவர் வாதம். நல்ல உக்தி.

இந்த நூலின் ஒன்பது ஸ்லோகங்களும் ஒன்பது ரத்தினங்கள். அவருடைய எளிமை, பணிவு போன்ற

குணங்களோடு கூட அவருடைய அற்புதமான அறிவுக்கூர்மையும் நாம் பார்க்க முடிகிறது. 'ஆர்த்திஹர' என்னும் சொல்லுக்கு 'துயர் களைதல்' என்று பொருள். உண்மையிலேயே மனமொத்து இதைப் படித்தால் நம் மனம் அமைதிப் படுவதைக் காணலாம்.

இறைவன் நம்மைப் பரிசோதித்து, நமக்கு உயர்ந்த ஞானத்தை அளிக்கிறான். ஆனால் நம்மால் அவன் உண்மை சொரூபத்தை உணரமுடிவதில்லை. இக்கருத்தையே மாணிக்கவாசகரின் வாய்மொழியாக அறிகிறோம். அவர் இறைவனை நோக்கிக் கேட்கிறார், 'எளியவனாகிய என்னை நீ எதற்காக ஆட்கொண்டாய்? முன்பு நான் அறிவற்றவனாக இருந்தேன் என்பதை உணர்கிறேன். ஆனால் இப்போது என் நிலை என்ன என்று எனக்கு விளங்கவில்லை. தயைகூர்ந்து எனக்கு விளக்கம் அளித்து அருளும்' என்பார்.

*அறிவனே அமுதே ஆடிநாயினேன்*
*அறிவன் ஆகக் கொண்டோ எனை ஆண்டது*
*அறிவு இலாமை அன்றே கண்டது ஆண்டநாள்*
*அறிவனோ அல்லனோ அருள் ஈசனே (திருச்சதகம் 50)*

இவர்களை வேண்டுமானால், 'அந்தக் காலத்தவர்' என்று ஒதுக்கலாம். சமீப காலத்தவர் ஒருவரின் அநுபவம் என்ன என்று பார்க்கலாமா? தியாகராஜ ஸ்வாமிகள் பக்தியின் திருவுருவம். ராமபிரானைக் கண் முன்னால் கண்டவர். பந்த பாசங்களையும் செல்வங்களனைத்தையும் உதறித் தள்ளியவர். இவர் பாடல்களில் பக்தி என்னும் பேராற்றின் அந்தர்வாகினியாக ஆன்மீகத்தின் முழுமையான வெளிப் பாட்டைப் பார்க்கலாம். 'எந்நாள்ளூ நீ தோவஜூது ராம' என்னும் கீர்த்தனையில் துவண்டுபோன ஒரு பக்தனைப் படம் பிடித்துக் காட்டுகிறார் இந்த மகான். இதைப் படித்தால் இது ஒரு பக்தனின் பிதற்றல் போலவும், முன்னுக்குப்பின் தொடர்பு இல்லாதது

போன்றும் தோன்றும். சித்தர்களின் பாடல்களில் இந்த இயற்கையான உணர்வின் வெளிப்பாடு பலமுறை வருவதை நாம் கண்டோம். தியாகராஜரின் பாடல்களில் மெய்மறந்த ஒரு அடியவனின் உண்மையான உணர்வுகள், பக்தியின் உன்னத வெளிப்பாடாக மிளிர்கின்றன. செவிக்கினிய இந்த அற்புத கான பிரவாகத்தில் நாம் ரசிப்பது சங்கீதம் மட்டுமல்ல, ஆழ்ந்த பொருள் கொண்ட சாகித்தியத்தையும் கூட.

'நான் எத்தனை காலமானாலும் நீ வரும் பாதையை வழிமேல் விழி வைத்துப் பார்த்துக் கொண்டிருப்பேன். இதை நினைத்துக் காலத்தைக் கழிப்பேன். இந்த உலகில் நாம் எல்லோரும் ஒரு பொம்மலாட்டத்தில் பாத்திரங்களாக இருக்கிறோம். நானும் அவர்களைப் போல ஆடிக் கொண்டிருக்கிறேன். என் உள்ளத்துள் நீயே இருக்கிறாய். ஆனால் என்னுடைய அந்தரங்கங்களை நீ பலரும் இருக்கும்பொழுது வெளிக்காட்டி விடுகிறாயே. எனக்கு பிறரைப் போல பெருமை அடித்துக்கொள்ளத் தெரியாது. சூதுவாது தெரிந்தவர்கள் என்னைக் கண்டு நகையாடுவார்கள். நான் அத்தகைய சாதாரணன் என்று அறிந்து ஒருவேளை என்னை விட்டு விட்டு சிறந்த பக்தர்களிடையே போய் அமர்ந்து விட்டாயா? நீயே எனக்குப் புகலிடம். நான் இந்தக் கலிகாலத்தின் மர்மங்களை உணராதவன். என்னைப்போல் அப்பாவி கிடையாது. பூவை விற்றுத் தொழில் செய்பவனிடம் விறகை விற்கச் சொன்னால் அவன் என்ன செய்வான்?

இந்தப் பாடல் ஒரு உண்மையான பக்தனின் ஆதங்கமாக வெளிப்படுகிறது. இந்தப் பொம்மலாட்டம் என்ற கருத்து ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் வருகிறது. 'இந்த உலகமே ஒரு நாடக மேடை; நாம் எல்லோரும் அதில் நடிகர்கள்' என்ற அந்தக் கருத்தின் ஆன்மீக வெளியீடாக இதைப் பார்க்க முடிகிறது. *(All the world's*

*a stage, And all the men and women merely players As You Like It)*

*மேலும் இந்தக் கலி காலத்தில் இறைவனின் அருளைப் பெறக் கூட சில கபட நாடகங்களை அவ்வப்பொழுது ஏற்று நடிக்க வேண்டி இருக்கிறதோ என்னும் வேதனையும் தொனிக்கிறது. இது அவனுக்கும் தெரியும் என்றாலும் நமக்குள் சஞ்சலங்கள் தோன்றுவது இயற்கை. அந்தச் சமயத்தில் தத்துவரீதியாக எண்ணங்கள் எழுவதில்லை. நம்முடைய உள்ளக் குமுறலை ஆண்டவரிடம் அர்ப்பணிக்கிறோம். அதுவே இந்தக் கீர்த்தனை காட்டும் கலிகால வாழ்வின் அடிப்படை. கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இவர், கலியின் கோலத்தை நன்கு உணரும் காலத்தில் வாழ்ந்தார் என்பது நோக்கத்தக்கது.*

*இந்தத் தன்னிரக்க நிலையின் எதிர்மறை விளைவு, இறையருள் பெற்ற பின்னரும் தொடங்குகிறது. வாத நோயால் பாதிக்கப்பட்ட பட்டத்ரி குருவாயூரப்பனைக் குறித்து 'நாராயணீயம்' என்னும் அற்புத கிரந்தத்தை இயற்றுகிறார். நோய் நீங்குகிறது. அந்நிலையில் நாராயண பட்டத்ரி ஒரு அற்புதமான படிப்பினையை நமக்கு வைக்கின்றார். 'இந்த நோய்கள் உள்ளபடியே எனக்கு நண்பர்கள். இவர்கள் இல்லாவிட்டால் என் வாழ்க்கை, சாஸ்திரங்களைப் படித்து அது பற்றிய விவாதங்களிலேயே கழிந்திருக்கும். பக்தியும் வேதமும் புறக்கணிக்கப்பட்டிருக்கும். இவ்வாறு வீணே நாளைக் கழித்து யம பட்டினத்தை அடைந்திருப்பேன். ஆனால் உங்கள் அருளால் இறைவன் திருவடியில் என் மனம் நிலைத்து விட்டது'. என்ன அற்புதமான ஒரு மனப்பான்மை! இறைவனைக் கண்ட ஒரு சத்வ மனத்திற்கு மட்டுமே இத்தகைய உயர் எண்ணம் தோன்றக்கூடும். இவரும் ஆயிரம் ஸ்லோகங்கள் கொண்ட இந்த நூலில் பலமுறை புலம்புகிறார்;*

*அவனை நோக்கிக் கதறி அழுகிறார். ஆனால் அருள் கிடைத்தவுடன் என்ன மாற்றம். (இதுவும் ஒருவகை புலம்பல் என்றுகூடத் தோன்றும்)*

*ஹே ரோகா: மம யூயமேவ ஸுஹ்ருதோ யைர்*
*நிஸ்ப்ருஸோகம் க்ருத:*
*காவ்யாலங்கிருதி தர்க்க கோவிதஸபா மத்யேஷு*
*ஸாஸ்த்ரேஷு ச ।*
*நோசேத் க்ருஷ்ண பதாரவிந்த பஜனம் வேதாந்த*
*சிந்தாமபி*
*த்யக்த்வா ஸ்வ: ஸ்வ: இதி ப்ரமாதஹமஹோ யாம்யேவ*
*யாம்யாம் திசம் ॥*

*இது ஆண்டவனின் லீலை. நம்மைப் பரிசோதித்து, நல்லருள் தருபவன் அவன். இடைப்பட்ட காலத்தில், பக்தன் தவிக்கிறான்; செய்வதறியாது பதறுகிறான்; கதறி அழுகிறான்; தன்மீது குறை காண்கிறான்; இறைவன் மீதும் குறை காண்கிறான். இதை ரசிக்கும் பரமன், சீக்கிரத்திலேயே அவன் குறை களைந்து அவனை ஆட்கொள்கிறான். பிறகென்ன..... ஆன்மிக சமுத்திரத்தில் அவன் நீந்தி மகிழ்ந்து இறைவனுடன் இணைகிறான்.*

*இதுதான் ரமணர் அநுபவித்த 'ராப்பகல் இல்லா வெறுவெளிவீட்டில் ரமித்திருப்போம்' என்னும் உயர்நிலை.*

**ரமணோதய அன்பர்களுக்கு**
**ஓர் அன்பான வேண்டுகோள்**

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவை புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# சப்ரிஜிஸ்திரார் நாராயண அய்யர் - 2

**வி. நிரஞ்சன்**

*செப்படி வித்தை கற்று இப்படிமயக்கு விட்டு*
*உருப்படு வித்தை காட்டு அருணாசலா*

அருளைப் பெறுவதற்கு நிபந்தனை அற்ற அன்பு மேலோங்கி இருக்கவேண்டும். அன்பினால் உள்ளம் முழுதும் நிறைந்து அருளுக்கு அடிமை ஆகிவிடவேண்டும். இறை அருள், குரு அருள், ஆன்ம அருள் என்பது ஒரு பொருளே, உள்ள பொருள் அது ஒன்றே என்பதை மெய்ப்பிப்பது சுவானுபூதி ஞானம் ஒன்றே.

இருப்பு அறிவு ஆனந்தமாகிய அப்பொருளினின்றே ஜக ஜீவ ஈசுவரர்கள் தோற்ற மாத்திரமாய் உதிப்பதும் ஒடுங்குவதாகவும் உள்ளனர். அனைத்தும் உதித்து ஒடுங்குவதற்கு இடமாயுள்ள நித்திய சத்திய மூலமே நமது சொருபம் என்பதே பகவான் ரமணரது அனுபூதி பூர்வமான உபதேசம்.

சம்சாரம் அல்லது வாழ்க்கை என்கின்ற மாயா சக்தியினால் அல்லற்பட்டுக் கொண்டு துயர்மிகுந்து சோகித்திருக்கும் ஒவ்வொருவருக்கும் பகவானது அருள்வாக்கு ஓர் அருமருந்து ஆகும். அம்மருந்து நம் ஒவ்வொருவரின் சொருபமே.

உள்ளே விளங்கும் பெரும் பொருளாகிய சொருபத்தினை அன்பு மிகுந்து உள் நோக்கும் ஆர்வலர்களாய் நாம் ஆகிவிடுகின்ற அத் தருணத்திலேயே சொருப ஜோதி நம் மனதின் சலனத்தை ஒழித்து நம்மை வலிந்து இழுத்துத் தன்னில் இரண்டற ஒன்றாக்கிக் கொள்ளும். அதுவே பந்த முக்தி.

இறைவன் மீது கொள்ளும் அன்பும், குரு மீது கொள்ளும் அன்பும், அருள் மீது கொள்ளும் அன்பும் உண்மையில் நமக்கு அன்னியமல்லாத சொருபத்தின் மீது கொள்ளும் அன்பே. நேரடியாக சொருபத்தின் மீது அன்பு செலுத்த இயலாத ஜீவர்களுக்கு அந்த சொருபமே ரமண சற்குருவாய் எல்லையிலாத பேரெழில் வடிவாய்த் தோன்றி தன் மீது அவர்களை அன்புகொள்ள வைக்கின்றது. சற்குருவாகிய ரமணரைக் கண்டு அவரது பேரெழிலால் ஆட்கொள்ளப்பட்டு அவரையே புகலாக அடைந்த ஜீவர்கள் எண்ணிலர். அவர்களில் ஒருவரே சப்ரிஜிதிரார் நாராயண அய்யர்.

பகவான் தன் மீது காட்டிய பரிவிற்கு அய்யர் அடிமை ஆனார். அவருடைய வெளிமுக வேலைகள் எல்லாம் பகவானின் அனுமதியின் படியே நடக்க ஆரம்பித்தன. பகவான் அன்பினால் அவரைக் கட்டிப் போட்டார் என்றே சொல்லலாம்.

பகவானுக்கு அருகில் இருந்து அவருக்குச் சேவை செய்யும் வாய்ப்பும் அய்யருக்குக் கிட்டியது. அய்யர் பகவானுடைய உதவியாளர்களின் நம்பிக்கையைப் பெற்று கிடைத்த தருணத்தில் எல்லாம் பகவானுக்குத் தொண்டாற்றி வந்தார். மூட்டு வாதத்தின் விளைவாகவும் பகலில் நெடு நேரம் ஒரே இடத்தில் பக்தர்களின் மத்தியில் அசைவற்றும் சமாதி கூடியும் பகவான் இருந்து வருவதால் அவரது கால்கள் விறைத்து மடக்கமுடியாமல் போய் விடும். அச்சமயங்களில் பகவானின் கால்களுக்கு எண்ணெய் தேய்த்துத் தடவிப் பிடித்துவிடும் அரிய பணியைச் செய்யும் புண்ணியத்தை அய்யர் பெற்றார்.

எத்துணையோ அன்பர்கள் இதற்காக ஆர்வத்தோடு துடித்துக் கொண்டிருந்தனர். தனது உதவியாளர்களைத் தவிர்த்து வேறு யார் ஒருவருக்கும் பகவான் இந்தப் பணியைச் செய்வதற்கு அனுமதிப்பதில்லை. இந்தக் காரியம் செய்வது புண்ணியம் என்றால் நானும்

எனது கால்களைப் பிடித்துவிட்டுக் கொண்டு கொஞ்சம் புண்ணியம் சேர்த்துகொள்கின்றேன், என்று விளையாட்டாக பகவான் சொல்லிக்கொண்டு தனது கால்களைப் பிடித்துவிட்டுக் கொண்டார் ஒரு சமயம்.

அதிகாலையிலேயே பகவானோடு சேர்ந்துகொண்டு அன்றாட பகல் உணவிற்கான காய்கள் நறுக்குவது முதலிய உதவிகளைச் செய்வதில் பங்குகொள்ளும் பாக்கியரானார் அய்யர். எவ்வித சிரமத்தையும் யாருக்கும் கொடுக்கக்கூடாது என்பதுவே பகவானது இயல்பு. நான் ஒருவன் இங்கே இருப்பதால் இங்கே வரவேண்டும் என்று எவ்வளவு பேர் சிரமப்பட வேண்டியிருக்கின்றது, என்று பகவான் வருந்துவார். சமையற்கட்டில் தாமே முன்வந்து உதவி செய்ய விரும்பியவர்கள் பலரை சிரமப்பட வேண்டாம் என்று அன்போடு தவிர்த்துவிடுவார். உங்கள் வீட்டில் நீங்கள் இப்பணி செய்வதில்லை அல்லவா. ஆதலால் உங்கள் வீட்டில் இருப்பதுபோல் இங்கும் தயக்கம் இல்லாமல் இருங்கள், என்று பரிவோடு கூறியிருக்கின்றார் பகவான். ஆதலால் அய்யருக்குக் கிடைத்த இந்த வாய்ப்பு அவரது புண்ணியமே.

பகவானிடம் அன்பு மிகுந்து அடிமையாய் பணிகள் பல செய்து நெருங்கி இருக்கின்ற பாக்கியரான அய்யர், தங்கு தடையின்றி பகவானிடம் எவ்வளவோ செய்திகளைக் கேட்டுப் பெற்றிருக்கின்றார். பகவானை அறிமுகப்படுத்தும் முதல் நூலை வெளிக்கொணர்ந்தவர் பி,வி. நரசிம்ம சுவாமி என்னும் அன்பர். சேலத்தில் புகழ்மிக்க வழக்கறிஞராகவும், இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாய் ஈடுபடுத்திக் கொண்டவராயும் இருந்தவர். பகவானது வாழ்வில் தொடர்புகொண்ட முக்கிய தலங்களுக்கு எல்லாம் சென்று அங்கிருந்தவரிடம் பகவானைப் பற்றிக் கேட்டு எழுத்து மூலம் செய்திகள் திரட்டி அவர் பகவானை அறிமுகப்படுத்தும் முதல் நூலை வெளியிட்டார்.

நாராயண அய்யரும் பகவானிடம் பல கேள்விகளைக் கேட்டு திருச்சுழி மதுரை ஆகிய இடங்களில் பகவானது இளமைப் பருவ காலத்தைப் பற்றிய செய்திகளை வெளிக்கொணர்ந்தார். அத்தோடு இல்லாமல், பகவான் பிறந்த திருச்சுழி வீட்டையும் அவர் ஞான உதயம் அடைந்த மதுரை வீட்டையும் ஆசிரமம் விலை கொடுத்து வாங்குவதற்கு உதவியும், அவற்றை முறையே சுந்தர மந்திரம், ரமண மந்திரம் என்று திரு நாமம் இட்டு ஆசிரமம் புண்ணியத்தலங்களாய் அவற்றை இப்போது பாதுகாத்து வருவதற்கும் வித்திட்டவர்களில் அய்யரும் ஒருவராய் இருந்தார்.

அன்பர்களின் கேள்விகளுக்கு பகவான் தமிழில் பதில் சொல்ல அதை ஆங்கிலத்தில் மாற்றி எழுதும் பணியையும் அய்யர் செய்துவந்தார். ஒருமுறை பகவான் தனது பதிலை வேகமாகச் சொல்லிவரவே அய்யர் சற்றே பகவானைப் பொறுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு ஒரு காகிதமும் பென்சிலும் எடுத்துகொண்டு பின்னர் பகவான் சொல்வதைக் கேட்டு எழுத முனைந்தார். அப்பொழுது பகவான் அவரை நோக்கி, “உங்களால் எழுத முடிந்ததை எழுதுங்கள். நான் சொல்லச்சொல்ல நீங்கள் எழுதிக்கொண்டு வந்தால் இதையும் அவர்கள் அச்சில் ஏற்றிப் பிரசுரித்துவிடுவார்கள். இதற்கு ஒரு முடிவே இருக்காது”, என்று கூறினார். வெறும் சொற்களால் உண்டாக்கப்படும் செய்திகளை குரு உபதேசம் என்று போற்றுவதை விட, சிரத்தையோடு செய்யப்படும் தீவிர வைராக்கிய சாதனையே முக்கியம் என்று சொல்லாமல் வலியுறுத்தினார் பகவான். அனைத்து நூற்களின் பயனும் தன்சொருபமே பரம்பொருள் என்னும் உண்மையைத் தெளிவுபடுத்துவதே. பரோக்ஷமாகப் பெற்ற ஞானத்தை அபரோக்ஷமாகப் பெற்று ஐக்கியசித்தி அடைவதே வாழ்வின் ஒரே பயன் என்பதை பகவான் வலியுறுத்தி வந்தனர்.

(தொடரும்)

# ரமணாயனம்

## க்ரேஸி மோஹறன்

### விளக்க உரை: ராம்மோஹறன்

### முக்தி காண்டம் (தொடர்ச்சி)

*மெய்யாம் துறவு மனதைத் துலக்குதல்*
*பொய்யாம் துறவென்ற பாத்திரம் உய்யாய்*
*குடும்பஸ்த்தன் சன்யாசி கொள்கை அளவில்*
*கடும்பித்தம் நானைக் களை....(371)*

உண்மையான துறவு என்பது உள்ளத்தை மாசில்லாமல் தூய்மையாக்குவதே. வெளிவேஷ சந்நியாசியாக இருப்பது பொய்மையே. குடும்பஸ்தன், சந்நியாசி என்று கூறுவதெல்லாம் வெளித்தோற்றத்தில் மட்டுமே இருந்தால் போதாது. நான் என்னும் எண்ணத்தை முற்றிலும் விடுவதே உண்மையான துறவு.

*தன்னைப் பராமரிக்கும் தாகம் துறந்திட*
*உன்னைப் பராமரிக்கும் உன்னான்மா கண்ணை*
*மறைக்கின்ற மோகங்கள் மாயப் பிசாசு*
*குறைக்கின்ற நாய்கடிக் காது....(372)*

நான்தான் பராமரிக்க வேண்டும் என்ற தன் முனைப்பை துறத்தல். நமது ஆத்மாவே நமது

தேவைகளை தந்து பராமரிக்கும். அகங்காரம் என்பது நமது ஞானக் கண்ணை மறைக்கின்ற மாயத்திரை. ஞான எழுச்சி பெறுமளவில் அது செயலற்று போகும்.

**உக்ராண உள்ளிலே ஒன்றுமில் லாதலால்**
**அக்ரா சனர்சொன்னார் ஆட்குறைப்பு அக்குரவர்**
**வற்றாக் கருணையால் வந்ததாம் பண்டங்கள்**
**பற்றாக் குறைதீர்க்கும் பற்று....*(373)***

அக்கிராசனர் = ஆஸ்ரம சர்வாதிகாரி;
குரவர் = ஞானகுரு ரமணன்.

**இதயம் வலது இடத்தில் விளங்கும்**
**புதிய விளக்கம் புகன்றார் உதயம்**
**உலகெனும் கோலம் ஒடுங்கிடும் புள்ளி**
**கலகநான் காரியின் கை....*(374)***

ஆத்ம இதயம் உடலின் இடப்பக்கமாக உள்ளது என்பது பகவானின் புதிய விளக்கம். மனத்தை குழப்பும் அகங்காரத்தின் கைவரிசையை அகண்டாகார விருத்தி நானெனும் அகங்காரத்தால் ஒரு சிறு புள்ளியாக மறைகிறது.

*சக்தி சிவனிடப் பக்கம் இருந்தாலும்*
*முக்திவலம் செய்தல் வலப்புறமே பக்தி*
*இறையுணர்வு போதும் இடவல மையம்*
*திரையவிழும் நாள்வரை தான்....(375)*

சக்தி இறைவனின் இடப்பக்கம் ஆயினும் நாம் முக்தி பெற இறைவனை வலம் வருகிறோம். இவ்வாறு இடப்புறம், வலப்புறம் என்று சுட்டுவது எல்லாம் அறியாமல் திரை மழை தான். அதனை அறுத்து எறிய ஞானம் அல்லது பக்தி வழியைப் பின்பற்றினால் போதும்.



*அண்ணாமலைச் சாரலில் அமைந்துள்ள ‘ஆமைப்பாறை’*

***நெருப்புக்கு பஞ்சாக நிஷ்டைக்கு நெஞ்சு***
***விருப்பிருந்தால் பற்றும் விரைவாய் கிறுக்குத்***
***தனமாய் இதயமிடம் தேடி அலைந்தால்***
***மனமாய் மயக்கிடு மது....(376)***

ஆன்மீக உண்மையை புரிந்து கொள்ளாமல் இதயம் இருப்பது இடப்புறம் அல்லது வலப்புறம் என்று பௌதீக ரீதியில் தேடி அலைந்தால் குழப்பம்தான் மிஞ்சும். அதற்கு மாறாக, ‘நான் யார்’ என்று விசாரத்தில் மூழ்கினால் நெருப்பு பற்றிய பஞ்சுபோல் அகந்தை அழியும்.

***என்ணெய்க் குளியல் எடுத்தாமைப் பாறைக்கு***
***அண்ணல் வரமீண்டும் அந்திமத்தை முன்னம்***
***மதுரையில் பார்த்த புதிராகப் பார்த்தார்***
***அதையவர் வாக்கில் அடுத்து....(377)***

எண்ணெய் குளியல் முடிந்த பின்னர் ஆமைப்பாறைக்குச் சென்ற பகவானுக்கு மதுரையில் ஏற்பட்டது போல் மீண்டும் மரண அனுபவம் ஏற்பட்டது.


வெள்ளம் புகுந்தாற்போல் வெள்ளைப் பிழம்பொன்று
மெள்ளப் படர்ந்தியற்கை மேய்ந்தது தெள்ளத்
தெளிவாய் வளியாய் ஒளியாய் வெளியாய்
களியாய் மரணக் கலப்பு....(378)

கலப்புத் திருமரணம் கொண்டமுகூர்த் தத்தில்
களைப்பாக சாய்ந்தேனோர் கல்லில் வலப்பக்க
மார்பி னிலிருந்தோர் மின்னல் புறப்பட்டு
சார்ந்த திடப்பக்கம் சேர்ந்து....(379)

இந்த அனுபவம் ஏற்பட்டவுடன் பகவான் பெருங்களைப்புற்று பாறைமீது சாய்ந்து கொண்டார். அப்போது மார்பின் வலது புறத்தில் இருந்து ஒரு மின்னல் ஒளி தோன்றி இடதுபக்கத்தில் சேர்ந்தது

சேர்ந்தென் னுடன்வந்த சாஸ்திரியார் ஓலமிட்டார்
நேர்ந்தயென் சாவால் நடுநடுங்கி தேர்ந்தேன்
அதிதியாம் கூற்றை அழையா விருந்தை
கதிகலங்க வைக்கும் கலை....(380)

அப்போது பகவானுடன் சென்ற சாஸ்தரிக்கு பெரும் அச்சம் ஏற்பட்டது. உரத்த குரலில் அழத்தொடங்கினார். பகவானின் அனுபவம் அவரை மிகவம் அச்சுறத்தியதால், தான் அழையாமலே வந்த யமனை முறியடிக்கும் கலையில் பகவான் கைதேர்ந்தவர் என்பதை அவர் அறியவில்லை.




# மேல்மேல் தாழ்ந்திடும் மெல்லியர் சேர்ந்து மேன்மையுற்றிடும் எங்கள் ரமணாஸ்ரமம்

**ஆகுரா**

"'உன்னைவிட்டு எங்கேயும் போகமாட்டேன்.' எங்கேயாவது சென்று, போகிற இடத்தில் பிராணனை விட்டு விடப் போகிறோமோ என்ற பயம்." என்று அம்மா தன்னிடம் கூறுவாள் என்பதை பகவான் நினைவு கூர்வதுண்டு. தனது மகள் அலமேலு புதுவீடு கட்டியபின் 'பார்த்து விட்டுப் போ அம்மா, தங்கவேண்டும் என்பதெல்லாம் கூடத் தேவை இல்லை' என்று ஆசைப்பட்டும் போக மறுத்துவிட்டாள் பகவானின் அன்னை அழகம்மை.

"இத்தேகத்தை கள்ளிப் புதரில் வீசியெறிந்தாலும் பரவாயில்லை, ஆனால் அது உன் கைகளால்தான் மூட

வேண்டும்” என்று அன்னை பகவானிடம் கூறிவிட்டாள். ஆம். அதுபோல்தான் நடந்தது. பகவான் மலைமேல் கந்தாஸ்ரமத்தில் அன்னையின் இறுதிநேரத்தில் அம்மாவின் தலையை தன் மடியில் கிடத்தி தன் திருக்கரத்தின் தீட்சையுடன் முக்தி அளித்தார். சமாதிவைக்கப்பட்ட இடம் பொட்டல் நிலம்தான் ஆனால் அது தங்கக்கை பகவானின் கரத்தால்தான் இன்று மாத்ருபூதேஸ்வரர் திருக்கோயிலாகி, ஆன்மிகம் தழைக்கும் புண்ணியமான ஸ்ரீ ரமணாஸ்ரமமாகி நம்மையெல்லாம் உய்விக்கும் க்ஷேத்திரமாகிவிட்டது என்பது சரித்திரம்.

முதன்முதலில் பகவான் மதுரை வீட்டைவிட்டு அருணை வந்தபின் பவழக்குன்றில் தங்கியிருந்தபோது “நீ ஏன் இங்குக் கஷ்டப்படுகிறாய். என்னுடன் வா, அங்கு வந்து திண்ணையில் வேண்டுமானாலும் இருந்துகொள் நான் காப்பாற்றுகிறேன்” என்று கூறியபோது, விடையேதும் கூறாது பகவான் மௌனம் சாதித்தார். அன்னை அழுது புரண்டபோது அன்பர்கள் வேண்டுதலின் பேரில், “அவரவர் பிராரப்தப்பிராகாரம் அதற்கானவன் ஆங்காங்கிருந்து ஆட்டுவிப்பன். நடப்பது என்தடை செயினும் நில்லாது, நடவாதது என்முயற்சிக்கினும் நடவாது. ஆதலின் மௌனமாய் இருக்கை நன்று” என்று எழுதிக் காட்டிய மௌனியான பகவான், பிற்காலத்தில் அன்னை, நீதான் கதி என மகனை மகனாகப் பார்க்காது பகவான் என ஏற்றுக்கொண்டு தஞ்சம் அடைந்தபோது, அன்னையை சிறிது சிறிதாக பக்குவப் படுத்தி முக்தி அளித்தார். அந்தநாள் 19/5/1922. மலைமேல் கந்தாஸ்ரமத்தில் நடைபெற்றது. அடுத்த நாள் அன்னையின் பூதவுடல் மலை அடிவாரத்தில் பாலிதீர்த்தக் கரையில் சமாதி வைக்கப்பட்டு பூசனைக்குரிய மாத்ருபூதேஸ்வரர் திருக்கோயிலாகப் பரிணமித்து இன்று ஸ்ரீ ரமணாச்ரமாக தழைத்தோங்கி உள்ளது.

நாட்பட மலைமேல் கந்தாஸ்ரமத்தில் இருந்து பகவான் நிரந்தரமாக அன்னை சமாதி அமைந்த

இடத்திற்கு அருகிலேயே குடிசை அமைத்து அணுக்கத் தொண்டர்களுடன் வசிக்கலானார். சிறிது சிறிதாக ஆஸ்ரமம் வளரலானது. பகவானின் அணுக்கத் தொண்டராயிருந்த பெருமாள்சாமி ஆஸ்ரம நிர்வாகத்தையும், அதன் உரிமையையும் தனதாக வழக்குத் தொடுத்து சொந்தம் கொண்டாட முயற்சிகள் மேற்கொள்ளலானார்.

பகவானின் பக்தர்களான யோகி ராமையா, ராஜகோபாலய்யர் மற்றும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. சுந்தரம் செட்டியார் ஆகியோரின் பங்களிப்புடன் 1936-ஆம் ஆண்டு அதற்கு ஒரு தீர்வு காணப்பட்டது. எனினும் இதுபோன்ற சட்டப் பிரச்சனைகள் பிறரால் எழாவண்ணம் பகவானின் பார்வைக்கு பக்தர்கள் கொண்டு சென்று, பகவானின் வழிகாட்டுதலுடன் ஒரு சட்ட ரீதியான உயில் எழுதப்படவேண்டிய கட்டாயத்தை வற்புறுத்தினர். அதன்படி நீதிபதி சுந்தரம் செட்டியார் மற்றும் துரைசாமி அய்யர் அவர்களால் பகவானின் சம்மதத்துடன் ஒரு உயில் பத்திர ஆவணம் வரையறுக்கப்பட்டு 1938-ஆம் ஆண்டு பத்திரப் பதிவு செய்யப்பட்டது. சாட்சியாக அன்றைய முக்கியஸ்தர்களும் பகவானின் பக்தர்களுமான ஆறுபேர் கையொப்பம் இட்டனர். அந்த உயிலில் பகவான் ரமணர், இந்த ஆஸ்ரம நிர்வாகம் மற்றும் சொத்துக்கள் பரிபாலனம் ஒரு அறக்கட்டளையாக செயல்படவும், மாத்ருபூதேஸ்வரர் மற்றும் தனக்குப் பின்னர் எழுப்பப்படும் கோவிலுக்கும் பூஜை செய்யும் உரிமை தனது சகோதரர் நிரஞ்சனானந்தர் அவர் பின்னர் அவர் மகன் வெங்கட்ராமன் அவரின்நேர் மரபு வழி சார்ந்த ஆண் வாரிசுதாரர்க்கும் வழிவழியாகச் சாரும் என ஒப்பமாக ஒரு கோடு இட்டு அதன் மேல் ரமண பக்தர் வழக்கறிஞர் சுப்பா ராவ் அவர்களை தனது சார்பாக ஒப்பம் இட அதிகாரம் அளித்ததன்பேரில் அவரின் கையெழுத்தையும் இட்டு அதை சட்ட ரீதியான ஆவண உயில் ஆக்கினர்.



இவ்வுயில் எதிர்கால பக்தர்களின் நலன் கருதி, ஆஸ்ரமம் நன்றாக நடைபெறும்வண்ணம் சென்னை உயர் நீதிமன்றத்தில் சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

பகவான் தனது பூத உடலை விடுத்து நீங்கி மகா நிர்வாணம் அடைந்த நாளான 14/4/1950 அன்றைய தினமே ஆஸ்ரம நிர்வாகத்தின் பேரில் சர்ச்சைகள் கிளம்பின. ரமண அன்பரும் முன்னாள் சென்னை மாநில முதல்வருமான ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் ஆளுமையால் அன்று அனைத்து சர்ச்சைகளும் ஒடுக்கப்பட்டன.

பகவானின் ஸ்தூல உடல் மறைந்த பின்னர், அதன் தாக்கத்தைத் தாங்கமுடியாமல் அனேக பக்தர்கள் கூட்டம் கூட்டமாக திருவண்ணாமலையை விட்டுச் செல்லத் துவங்கினர். 1950 முதல் 1960 வரை ஏறத்தாழ ஆஸ்ரம வளாகம் ஒரு சூன்யமாக உணரப்பட்டதாக அறிகிறோம். ஆஸ்ரம நிர்வாக உரிமைகொண்டாடி வழக்குகளும் கிளர்ந்தெழுந்தன. இந்து சமய அறநிலையத்துறை மீண்டும் மீண்டும் ஆஸ்ரமத்தை எப்படியாவது தங்கள் அதிகாரத்திற்குக் கொண்டுவர

முயற்சிகளைத் மேற்கொண்டது. பகவான் காலத்தில் இவர்கள் ஆஸ்ரமத்தை அணுகி, மாத்ருபூதேஸ்வரர் கோயில் நிர்வாகத்தை ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது என்றபோது பகவான் கூறினார்: "எல்லாக் கோவில்கள் போன்றதா அன்னையின் ஆலயம்" எனக் கேட்டவுடன் அடங்கி அப்போது போனவர்கள் மீண்டும் அவர் பூதவுடல் நீத்தபின் படையெடுத்தனர்.

சுவாமி நிரஞ்சனானந்தர் பகவான் உடல் நீத்தபின் பல இன்னல்களை எதிர்கொள்ளவேண்டிவந்தது. அவரின் இதய நோய் அவரைப் படுக்கையில் தள்ளியது. திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தலைமையில் 14 பேர் கொண்ட ஒரு குழுவை நிர்வாகத்திற்காக அமைத்தார். தனது இறுதிக் காலத்தே 29/1/1953 அன்று உடல் விடும் முன்னர் ஒருநாள் தனது உறவினர் மற்றும் அவரின் ஒரே வாரிசான வெங்கட்ராமனை அழைத்து "நான் இதய சுத்தியுடனும் கைசுத்தியுடனும் உங்களையெல்லாம் விட்டுப் பிரிகிறேன். சொந்த நலனுக்காக ஆசிரம சொத்திலிருந்து ஒரு பைசா கூட உபயோகித்தவனல்ல. இங்குள்ள உடைமைகள் யாவும் ஸ்ரீ பகவானுடையவை. சிரத்தையுடனும், விழிப்புடனும் பாதுகாக்கப்பட வேண்டியவை. இறைவன் பணியில் மனப்பூர்வமாய் ஈடுபடுங்கள். ஆண்டவனின் அருள் உங்களுக்கு நிச்சயம் உண்டு. நேர்மையும் நாணயமுமே பரமபூஷணமாக இருத்தல் வேண்டும். இவ் ஆசிரமத்தை நடத்துவதில் நமது புனித சம்பிரதாயங்களை நிலைநிறுத்துங்கள். எனது வாழ்நாள் முழுவதும் நான் இவ்விதமே செயல்பட்டு வந்துள்ளேன். . . ." என்று அறிவுரை கூறினார்.

சுயநலமற்ற ஓர் தூய வாழ்க்கை வாழ்ந்து மறைந்த அந்த உத்தமருக்குப் பின் பகவானின் உயிலின்படி அவரது ஒரே மகனான வெங்கட்ராமன் நிர்வாகத் தலைவர் ஆகவேண்டும். அவர் நிர்வாகத்தை ஏற்கும் முன்னரே ஏராளமான பிரச்சனைகளை அவர் எதிர்கொள்ள வேண்டி

வந்தது. பகவான் ஸ்தூல உடலுடன் இல்லை, அவரது தகப்பனாரும் இல்லை, பக்தர்கள் கூட்டமோ வருவதே இல்லை. ஆஸ்ரமம் கடனில் மூழ்கி தத்தளித்துக் கொண்டு இருந்தது. அவரது குடும்பம் 12 பேர் கொண்டதாக இருந்தது. அனைவரையும் காப்பாற்றியாக வேண்டும். பல்வேறு குழுக்களாக பக்தர்கள் நிர்வாகத்தை கைப்பற்ற வழக்கு தொடுத்தவண்ணம் இருந்தனர். வழக்குகளின் எண்ணிக்கை 30 க்கும் மேல் பல்வேறு நீதிமன்றங்களில் கிடந்தன. வெங்கட்ராமனோ வாரிசு உரிமை அத்தாட்சி பத்திரம் வாங்கவே போராடவேண்டியிருந்தது.

பிறந்தவுடனேயே தாயை இழந்த வெங்கட்ராமனுக்கு தாயாக இருந்து வளர்த்தவர் அவரது அத்தை அலமேலு. அவர் இந்தக் காலக்கட்டத்தில் இறந்து விட்டார். தகனம் செய்த கையோடு, ஈரத்துணியுடனேயே இந்து சமய அறநிலையத்துறையின் கமிஷனர் முன் ஆஜராக வேண்டிய கொடுமையான நிலைமை. அப்படியும் அந்த வழக்கில் தோல்வியே கிடைத்தது. சொந்த வாழ்க்கையில் பெரிய குடும்ப சுமை, ஆஸ்ரம நிர்வாகத்தில் சிக்கல்கள், வழக்குகள் மலை போல்.

ஆஸ்ரமத்தில் ஸ்ரீனிவாச ராவ் என்னும் பக்தர் ஆஸ்ரம கொட்டகையைத் தானே கொளுத்தி, பழியை வெங்கட்ராமனின் பேரில் போட அவர் கைதாகும் நிலை. அன்றைய முதல்வர் காமராஜர் உதவிக்கு வந்து கைதை ரத்து செய்து ஸ்ரீனிவாசராவை கைது செய்ய வைத்தார். கைக்குழந்தையாக இருந்தபோதே தாயாரை இழந்துவிட்டதால், தாய்ப்பால் மறவர் குல பெண்டிரால் ஊட்டப்பட்ட அந்த வீரம் மற்றும் பகவானின் பின் பலம் அவரைத் துணிந்து நிற்க வைத்தது.

பகவானின் சிறப்பு என்னவென்றால், திறமை மிக்கவர்களையெல்லாம் பயன்படுத்தமாட்டார். அந்தத் துறைபற்றிய அறிவே இல்லாதவர்களுக்குத்தான் பணி செய்யும் பாக்கியம் கிட்டும். அப்படித்தான்

தமிழ் அறிவே இல்லாத கனகம்மாளுக்கு முருகனார், பகவானின் தூய தமிழ் உபதேச நூல்களின் பொருளைப் போதிக்கப் பிற்காலத்தில் அனைத்து நூல்களுக்கும் உரை எழுதவைத்தார். தமிழ் பண்டிதர்கள் எவருக்கும் அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை. அதுபோல் சட்ட அறிவு என்பதே இல்லாத வெங்கட்ராமன் அவர்களுக்கு வழக்கு சிக்கல்கள், கையில் காசு ஏதும் இன்றி, காந்தியவாதியான வெங்கட்ராமன் கதர் உடையுடன் கையில் கதர் பையில் வழக்குக்கு வேண்டிய கட்டுகளுடன் வக்கீல்கள் முன் நின்றுகொண்டு, “என் கையில் காசு இல்லை, பகவான் ரமணரின் ஆஸ்ரம நலன் வேண்டி வழக்காட வேண்டியுள்ளது” என்று நிற்பதுண்டு. நல்ல உள்ளம் கொண்டவர்கள் வழக்காட முன்வந்து உதவுவர். பல நாட்கள் கால்கடுக்க வழக்கறிஞர்களின் வாயிலில் தவம் கிடக்க வேண்டிவரும். மேல்மேலும் கிடைத்துக்கொண்டே வந்த தோல்விகளில் துவளாது போராடிய வெங்குட்டுவின் (அப்படித்தான் செல்லமாக அவர் அழைக்கப்பட்டார்) நிலை நம்மை இன்றும் கண் கலங்கவைக்கிறது.

ஆகஸ்ட் மாதம் 1953 ஆம் ஆண்டு வெங்கட்ராமன் அவர்களின் சட்டரீதியான நிர்வாக வாரிசு உரிமை சென்னை உயர்நீதிமன்றம்வரை சென்றபின் அவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஆயினும் இந்து அறநிலையத்துறை தான்தான் ஆஸ்ரமத்தை ஏற்று நடத்தும் என்ற வழக்கு 1956-ஆம் ஆண்டு வேலூர் நீதிமன்றத்தில் அறநிலையத்துறைக்கு சாதகமாக தீர்ப்பாகியது. ஆஸ்ரம நிர்வாகம் அரசாங்கத்திற்குப் போய்விடுவதாக அமைந்தது. மேல்முறையீட்டுக்கு சென்னை உயர்நீதி மன்றம் செல்ல வேண்டியிருந்தது. அதற்கு முன்பாக அரசாங்கம் ஆஸ்ரமத்தை ஏற்று நடத்தும் என்பது உறுதியாகிவிட்டது. அன்றைய முதல்வர் காமராஜரின் பார்வைக்குக் கொண்டு சென்றபின் அவர் தற்காலிகமாக அரசாங்கம் ஏற்பதைத்

தடை செய்ய உதவினார். அத்துடன் ஆஸ்ரமத்திற்கு வேறு எந்த உதவி தேவைப்பட்டாலும் தன்னை அணுகும்படிக்குக் கூறினார்.

உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்துகொண்டு இருந்தபோது, நீதிபதியாக இருந்த எம். அனந்தநாராயணன் அவர்கள், ரமணாஸ்ரமம் என்பது சர்வதேச பெருமை வாய்ந்தது, மேலும் பல்வேறு மதத்தினரும் வந்து செல்லும் பொதுத்தன்மை கொண்டது, எனவே இது பொதுவான சமய அறக்கட்டளையாக ஏன் ஏற்கக்கூடாது என்று அறிவுறுத்தினார். மாத்ருபூதேஸ்வரர் ஆலயம் ரமணாஸ்ரமத்தின் அங்கமே. உலகின் பல்வேறு மதத்தினர், நாட்டினர் அமைதிகாணும் சரணாலயமாகத் திகழ்வது ரமணாஸ்ரமம். எனவே இது ஒரு இந்துமதம் என்ற சார்புடையதாக மட்டும் ஏற்க வேண்டியதில்லை. இது ஒரு பொதுவான சமய அறக்கட்டளை (Public Religious Trust) என்பதாக ஏற்கப்பட்டது.

“மணிகளில் சரடு என உயிர்தொறும் நானா மதந்தோறும் ஒருவனாய் மருவி நிற்பவர்” ஸ்ரீ ரமண பகவான்.

அவரிடம் அந்த நூலறிவு (சரடு பற்றிய அறிவு) பெறவேண்டி பக்தியோடு பக்த கோடியினர் தேசம், காலம், இனம் மதம் கடந்து பணிந்து நிற்பவர் ஆவர். எனவே இந்து சமய அறநிலையத்துறை ஏற்பது செல்லாது என்று 12/12/1959 அன்று ஆஸ்ரமத்திற்கு சாதகமாக பக்தர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு தீர்ப்பாகியது.

இதனையொட்டி அமைச்சர் திரு. பக்தவச்சலம் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அறக்கட்டளைக்கான பொது வரையறைகள் வகுக்கப் பட்டன. சட்டம், வருமானம் சார்ந்த செயலர்கள்

மற்றும் மாநில அட்வகேட் ஜெனெரல் ஆகியோருடன் வெங்கட்ராமன் அவர்களும் கலந்துகொண்டார்.

அத்திட்டப்படி ரமணாஸ்ரமத்தின் அசையும் அசையாப் பொருள் அனைத்தையும் ஐந்து பேர் கொண்ட குழு நிர்வகிக்கும். ரமணரின் உயில்படி, பாரம்பரிய வாரிசான திரு. வெங்கட்ராமன் (மற்றும் அவருக்குப் பின்னர் அவரின் ஆண் வாரிசு), அந்த அறக்கட்டளையின் வாரிசுத் தலைவராகவும், குழுத் தலைவராகவும் ஆவார். மற்ற நான்கு உறுப்பினர்கள் மூன்றாண்டு காலத்திற்கு நியமிக்கப்படுவர். அவர்களில் இருவரை வாரிசு தலைவரைக் கலந்து ஆலோசித்தபின் மாநில அரசு நியமனம் செய்யும். ஏனைய இரு உறுப்பினர்களை வாரிசுத் தலைவரே தேர்வுசெய்வார். ஆயினும் அந்த இருவரின் நியமனத்திற்கும் அரசு அங்கீகாரம் தேவை. இந்தத் திட்டம் வெங்குட்டு அவர்களின் காலத்தே நடைமுறைக்கு ஏனோ அரசாங்கம் கொண்டுவரவில்லை. (அவர் காலத்திற்குப் பின்னர் இந்தத் திட்டம் இன்று நடைமுறையில் உள்ளது.)

இப்படியாக திரு வெங்குட்டு அவர்கள் ஆஸ்ரமத்தை நிர்வகிப்பது என்ற பகவானின் அதி தீவிர பக்தர்களின் அபிலாசையானது பகவானின் ஆசீர்வாத ஆவணத்தின்படி நிறைவேறியது. இது பகவான் குடும்பத்தினரின் பாத்தியதையாக அவர்கள் பாடுபட்டு நிலைநாட்டுவது என்பதல்ல. பகவானிடம் தூயபக்தி கொண்ட அன்பர்கள் எதிர்காலத்தில் வளர்ந்துவரும் பக்தகோடிகள் நலன் கருதி ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். இது இப்படியாக இருந்தால்தான், இங்கு அமைதி நிலவி பக்தர்கள் பயன் அடையமுடியும் என்பதற்காக, அன்றைய பக்தர்கள் எதிர்கால பக்தர்களுக்காக பகவானின் மூலம் செய்யப்பட்ட பட்டயமாகும்.

அது இன்று நிதர்சனமாக உணரப்படுவதால் அதை மேலும் விளக்கவேண்டியிராது.

வெங்குட்டு அவர்கள் நிர்வாகி என்பது நிலையான பின்னர் அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்த பிரச்சனைகள் ஏராளம். ஆஸ்ரமம் கடனில் இயங்க வேண்டி இருந்தது. அவரின் 12 பேர் கொண்ட குடும்ப சுமை, பிள்ளைகளின் படிப்பு என மீண்டும் நீட்டிக்கொண்டு போகலாம். பக்தர்கள்தான் ஆஸ்ரமத்தின் ஒரே சொத்து என்பதை அவர் நிதர்சனமாக உணர்ந்தார்.

அந்தத் தீர்க்க தரிசனத்துடன் நாடு முழுவதும் பயணம் மேற்கொண்டு ஆஸ்ரம வளர்ச்சியில் கவனம் செலுத்தினார். மக்களை நன்றாக படிக்கவைத்தார், பெண்களுக்குத் திருமணம் செய்வித்தார். அவருக்கு பக்தர்களின் உதவி மலைபோல் குவிந்தது. ஆஸ்ரமம் கட்டுக்கோப்பாக வளர அந்தக்கால பக்தர்கள் மேஜர் சாட்விக், Dr. T. N. கிருஷ்ணசாமி, K. K. நம்பியார், S. S. கோஹன், ஆர்தர் ஆஸ்பர்ன் மற்றும் பலராம ரெட்டியார் போன்றோர் பெரிதும் உதவினர்.

டெல்லியில் காந்திஜி அவர்களின் எழுத்துக்கள் அனைத்தையும் ஒன்றாக்கி ஆங்கிலத்தில் பதிப்பிக்கும் பணியில் இருந்த பேராசிரியர் K. சுவாமிநாதன் அவர்களின் நட்பு வெங்குட்டு அவர்களுக்கு மிகவும் உதவியது. பகவானின் தீவிர பக்தரான பேராசிரியரின் ஆலோசனைகள் ஆஸ்ரமத்திற்கு மிகவும் உதவின. மேலும் டெல்லியில் உயர்பதவியில் இருந்த A. R. நடராஜன் அவர்களின் உதவிகளும் கிடைத்தன.

வெங்குட்டு அவர்களின் இரண்டாவது மகன் திரு. கணேசன் அவர்கள் 1961-ல் தனது மேற்படிப்பு முடிந்து பத்திரிகை துறையில் பணியாற்றி வந்தவர், பணியைத் துறந்து தகப்பனாருக்குத் துணையாக ஆஸ்ரமம் வந்து சேர்ந்தார். பகவான் பூதவுடல் துறந்து நிர்வாணம் அடைந்தவுடன், அநேக பக்தர்கள் விரக்தியில் திருவண்ணாமலையை விட்டுப் பல்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துவிட்டனர். ‘நடுக்கடலில்

நாவாய் அருங்கலத்துப் பாய்மரம் நீங்கிய பறவைகள் எங்கு சுற்றித்திரிந்தாலும் இறுதியில் வேறு வழியின்றி மீண்டும் பாய்மரத்தையே நாடிவருவதுபோல' பக்தர்கள் ஒவ்வொருவராக ஆஸ்ரமத்திற்குத் திரும்பலுற்றனர்.

திரு. கணேசன் அவர்கள் அதுபோன்ற பக்தர்களைத் தேடிச்சென்று ஆச்ரமத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தார். தகப்பனாருக்கு நிர்வாகத்தில் துணையாக இருந்தார். அவர் காலம் முழுதும் ஆச்ரமப்பணியில் தன்னை அர்பணித்துக்கொண்டு திருமணமே செய்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வெங்குட்டு அவர்களின் மூத்த மகன் சுந்தர ரமணன் மற்றும் இளைய மகன் சுப்பிரமணியன் இருவரும் இன்ஜினியர்கள் ஆவர். இதில் வெங்குட்டு அவர்களின் மூன்றாம் மகன் V. சுப்ரமணியன் (மணி என்றும் மணி அண்ணா என்றும் அன்புடன் அழைக்கப் படுபவர்.) 1985 ஆம் ஆண்டு Project Engineer ACC Vickers Babcock Ltd Mumbai பணியிலிருந்து விருப்ப ஓய்வு எடுத்துக்கொண்டு, தகப்பனாருக்கு நிர்வாக உதவிகள் செய்ய ஆஸ்ரமம் சேர்ந்தார். இவர் நிர்வாகத்தில் மிகத் திறமைவாய்ந்தவர்.

திரு. வெங்குட்டு அவர்களின் நிர்வாகத்தின்கீழ் ஆஸ்ரமம் ஆலமரமெனத் தழைத்து வேர்விட்டு வளர்ந்தது.

“டேய் தாம்பரம்” அவர் என்னை அப்படித்தான் அழைப்பார், நான் வசித்த இடம் தாம்பரம் என்பதால் அவ்வாறு குறிப்பிடுவார். என்னை பார்க்கும் போதெல்லாம் “தாம்பரம் தங்கமாயிடுச்சு” என்று அன்பு கூட்டுவார். அவர் எதிரிகளை சமாளிப்பதில் வல்லவர். “டேய், தாம்பரம்! எதிரிகளை சமாளிக்க முதலில் அவர்களை நம்பக்கம் ஈர்த்துக் கொள்ளவேண்டும்” என்று புத்தி கூறுவார்.

*என்னை அழைத்துச் சென்று ஆஸ்ரமத்தின் ஒவ்வொரு வளர்ச்சியையும் மிகவும் அக்கறையுடன் வர்ணிப்பார். கோசாலை கூரை ஏன் இரும்புக் கம்பிகளால் மூடப் பட்டுள்ளது (புலிகள் வருமாம், மாடுகள் பாதுகாப்புக்காக போடப்பட்டதாம்), தாயார் ஆலயத்தில் தக்ஷிணாமூர்த்தி சிலைக்கும் ராஜாஜிக்குமான தொடர்புகள் என்பதாக நிகழ்வுகள் வர்ணிக்கப்படும். ஆஸ்ரம சமையல்கூடம் அழைத்து சென்று அன்று நான்கு இட்லிக்கு சண்டை நடந்த விபரம் கூறி இன்று 600க்கும் மேல் இட்லிகள் காலையில் தயாரித்துப் பரிமாறப்படுவது, இறுதியாக தனக்கு ஒரு சிறிய அறை (A-19) தங்குவதற்கு ஆஸ்ரமத்தில் கொடுத்துள்ளார்கள் பார்! என்று தனது அறைக்கு அழைத்துச் சென்று காண்பிப்பார்.*

*சமயம் கிடைக்கும் போதெல்லாம் தான் எங்கு சமாதி வைக்கப்படவேண்டும் என்பதை சுட்டிக்காட்டி, "இங்குதான் வைக்க வேண்டும். மாற்றி வைத்துவிடப்போகிறார்கள் பார்த்துக்கோடா" என்பார்.*

*ஒரு பெரிய ஆலமரம், சிறிய பூண்டு செடியுடன் (என்னுடன்) நடந்துவந்து காட்டுவதுபோல் இருக்கும். எப்பேர்ப்பட்ட ஓர் மாமனிதன் தன்னை ஒரு சிறு பாத்திரமாக சுருக்கிக் கொண்டு எளிமையுடன் தான் வளர்த்த பிரம்மாண்டமான ஆஸ்ரம வளாகத்தைச் சுற்றிச்சுற்றி வருகிறது. இந்த ஆஸ்ரமம் இவ்வாறு ஓர் அமைதிப் பூங்காவாக அனைத்துப் பக்தர்களுக்கும் அமைய சுதந்திர ஆன்மிக மையமாக வளர்க்கப்பட வேண்டும் என்ற பகவான் ரமணரின் வார்த்தைகளை மெய்ப்பிக்கும் இந்த உத்தமரின் எளிமை மெய் சிலிர்க்க வைக்கும்.*

*இத்தகைய ஓர் உன்னத பக்தர்களின் ஆன்மிக சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கத்தானே 30க்கும் மேற்பட்ட கோர்ட் கேஸ்களை சளைக்காமல் சந்தித்தார். அவர் சிறுபிள்ளை போல் பேசுவார். தனது ஒரே ஒரு*

தனிப்பட்ட அபிலாஷையாக என்னிடம் கூறியது, தனது மூத்த பேரன் (தற்கால ஆஸ்ரம நிர்வாக தலைவர் திரு Dr. Venkat. S. Ramanan) அமெரிக்காவில் கட்டிய வீட்டைப் போய்ப் பார்க்கவேண்டும் என்பதே. அவரின் வயது காரணமாக அது நிறைவேற்றப் படவில்லை. அன்னார் 26/12/2007 அன்று பகவான் திருவடிகளை அடைந்தார்.

வெங்குட்டு அவர்களின் மூத்த மகன் திரு V. சுந்தர ரமணன் அவர்கள் தான் பணியாற்றி வந்த General Manager M/S Indian Petrochemicals Corporation, Baroda பணியிலிருந்து 1992 ஓய்வு பெற்று ஆஸ்ரம பணியாற்ற திருவண்ணாமலை வந்து சேர்ந்தார்.

திரு. வெங்குட்டு அவர்கள் தான் தலைவராக பணியாற்றியது போதும் என்று கருதி ரிஷிகேஷில் சிவானந்த ஆஸ்ரமத்தில் சன்யாச தீட்சை பெற்ற கையோடு 1994-ஆம் ஆண்டு தனது மூத்த மகன் திரு சுந்தர ரமணனிடம் தலைவர் பதவியை அளித்து விட்டு ஓய்வு பெற்றார். இவருடன் இவரது இரண்டாவது மகன் கணேசன் (கணேசன் அண்ணா) அவர்களும் ஆஸ்ரம நிர்வாகம் போதும் என்று ஆன்மிக சாதகத்தில் தன்னை ஆட்பித்துக்கொண்டார்.

திரு சுந்தர ரமணன், 'சுந்தரண்ணா' என்று அன்புடன் அழைக்கப்படும் ஒரு அன்பின் வடிவம். பக்தர்களுக்கு மெல்லிய, அன்பான வாஞ்சை மிக்கவர். இவரின் கரத்தை வலுப்படுத்த அன்னாரின் இளையவர் திரு. மணி அவர்கள் தந்தைக்கு உறுதுணையாக இருந்தது போல் தமயனுக்கும் துணை நின்றார். திரு சுந்தரண்ணா தலைமையில் ஆஸ்ரமம் மேலும் பல துறைகளில் வளர்ச்சி கண்டது. உலகம் முழுவதும் பகவானின் புகழ் மேலும் பரவும் வகையில் பக்தர்களுக்கு உதவும் வகையில் பல புத்தகங்கள் வெளியிடப்பட்டன. பகவானின் வண்ணப் புகைப்படங்கள் உலகத்தின் மூலை முடுக்கிலெல்லாம் சென்றடைந்தது. கணினிமயம்

துவங்கியது. பகவானின் திருவுருவம் தாங்கிய ரதம் தென்னகம் முழுவதும் பெரிய அளவில் வலம் வந்து, பகவான் அருளிய "அருணாசல அக்ஷர மண மாலை" எனும் பக்தியும் ஞானமும் செழிக்கும் நூல் அனைவரின் நாவிலும் பக்தியுடன் இசைக்கப்பட்டது.

உலகெங்கும் ரமண பக்த சத்சங்கங்கள் தழைக்கப் பெரும் உதவிகள் ஆஸ்ரமம் சார்பாக சென்றடைந்தது. ஆஸ்ரம அன்னதான சேவை மேலும் பெருகியது. அன்னாரின் காலத்தில்தான் அரசாங்கத்தால் அறங்காவலர் குழுத் திட்டம் அமுலுக்கு வந்தது. அறங்காவலர்களின் குழுவும் பகவானின் ஆசிர்வதிக்கப்பட்ட நிர்வாக முறைகளைத் திறம்பட ஆஸ்ரம தலைவரின் கீழ் நிறைவேற்றிவருகிறது. ஆஸ்ரமத்தின் பாகசாலை (அடுக்களை), வேத பாடசாலை, நூலகம், புதிய நூதன தங்கும் அறைகள், ஏழைகளுக்கான மருத்துவ உதவிக்கான ஸ்ரீரமணாச்ரம மருந்தகம் என பலதுறைகள் வளர்ச்சிபெற்றன.

பகவான் பயன்படுத்திய பொருள்கள், அவர் கைப்பட எழுதிய பிரதிகள் என்றெல்லாம் பாதுகாக்கவேண்டி பெரிய அளவில் உலகத்தரம் வாய்ந்த அறிய பொருள்காப்பகம் உருவானது. திருவண்ணாமலை அல்லாது பகவானின் அனைத்து சம்பந்தப்பட்ட புனிதத்தலங்களும் புதுமெருகு பெற்று பாதுகாக்கப் பெற்றன.

அமெரிக்காவில் மிகவும் பெரிய ஒரு பதவியில் திறமை மிக்க பொறியாளராக புகழ்பெற்றிருந்த அன்னாரின் இளைய மகன் திரு. ரவி ரமணன், ஆச்ரம இணைய தளத்தை நிர்வகித்தும், 'சரணாகதி' என்ற இணைய இதழை நிர்வகித்தும் வந்த நிலையில் 2010-ஆம் ஆண்டு மறைந்தார். அவரின் மறைவு சுந்தரண்ணாவின் உடல்நிலையில் மிகவும் ஒரு பெரிய பாதிப்பைக் கொடுத்தது. ஆயினும் அதைப் பொறுட்படுத்தாது அடுத்த எட்டு ஆண்டுகள் ஆஸ்ரம பணியாற்றினார்.

2018 ஆம் ஆண்டுமுதல் அன்னாரின் உடல் நிலை தளர்ச்சி உற்றதால், அறக்கட்டளை குழுவினரிடம் பகவானின் அருள் கட்டளைக்கேற்ப அடுத்த நிர்வாகத் தலைவராக தனது மூத்த மகன் டாக்டர் வெங்கட் ரமணன் அவர்களை நியமிப்பதாக அறிவித்தார்.

அன்னாரின் சகோதரர்கள் இருவருமே வயதின் முதிர்ச்சியால் நிர்வாகத்தில் முழுவதும் கவனம் செலுத்த முடியவில்லை. அமெரிக்காவில் மருத்துவமனை நிறுவி நிர்வகித்து வந்த டாக்டர் வெங்கட் ரமணன் அவர்கள் பக்தர்களின் அபிலாஷைப்படி, பகவானால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஆசிர்வதிக்கப்பட்ட ஆவணத்திற்குக் கட்டுப்பட்டு, தனது சொந்த குடும்பத்தை அமெரிக்காவிலேயே விட்டுவிட்டு, கொரானா என்ற பேரிடர் காலத்தில் பல சிரமங்களைக் கடந்து தமிழகம் திரும்பியுள்ளார். அன்னார் தனது உலகரீதியிலான வசதிகளை, செல்வங்களைச் சேர்ப்பதைத் தவிர்த்து சேவை மனப்பான்மையுடன், தனக்கு மூத்த பெரியவர்களான திரு. கணேசன் மற்றும் திரு. மணி சித்தப்பாக்களின் மனப்பூர்வமான ஆசிகளுடனும், தாய் சுசிலா அம்மாள் மற்றும் உடல்நலம் தேறிவரும் தந்தை சுந்தரம் அண்ணா அவர்கள் ஆசிகளுடனும் அறங்காவலர் குழுவினரின் ஒத்துழைப்புடனும் 17/6/2020 அன்று காலை பகவானின் சந்நிதியின் முன்பு மண்டியிட்டு நிர்வாகத் தலைவர் பதவியை நான்காவது ஆஸ்ரமத் தலைவராக ஏற்றுக்கொண்டார்.

அன்னார் மருத்துவர் மட்டுமல்ல பணிவோடு பணிசெய்யும் நிர்வாகத் திறமை உடையவர். அவருக்கு பகவான் நீண்ட ஆயுளைக் கொடுத்து பகவானின் பக்தர்களின் பணியில் சிறக்கச் செய்ய அருணாசல ரமணனை பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

ஆஸ்ரமம், அதன் நிர்வாகம் என்பது, பகவான் ரமணரின் சகோதரர் குடும்பத்தினரிடம் இருந்தால்தான்,

*பக்த கோடிகளுக்கு எந்நாளும் நல்லது என்ற தீர்க்கதரிசனத்துடன் பகவானை அணுகி அவரது ஒப்புதலைப் பெறவைத்த அனேக பக்தர்களுக்கும் இன்றைய ரமண உலகம் தலை வணங்குகிறது. தன்னலம் கருதாது, தங்கள் உலக சுகங்களை யெல்லாம் லட்சியமாக கருதாது, பகவானின், அவர் பக்தர்களின் பணியில் சிறக்க வாழ்ந்து வரும் பகவான் குடும்பத்தினரை, ரமண உலகம் சிரம் தாழ்த்தி வணங்குகிறது.*

*ஒவ்வொரு காலகட்டத்திலும் ரமண பக்தர்கள் ஆஸ்ரமத்திற்கு ஆற்றிய சேவை மிகவும் குறிப்பிடத்தக்கது. மாபெரும் தூணாக நிர்வாகத் தலைவர்களுக்கு தங்களது உலக சுக வாழ்வைத் துறந்து, ஆன்மிகப் பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் ஏராளம். தங்களுக்கு ஒரு சிறிய அறை என்பதாகக் கிடைத்தாலும் அதில் முடங்கி சொந்தபந்தங்கள் என்று பற்று இல்லாமல் ஆஸ்ரமப் பணிகளில் அன்றுமட்டுமல்ல இன்றும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள சேவகர்கள் வரிசை மிகப் பெரியது. அவர்களைப் பெயர் குறிப்பிட்டு மாளாது. அந்த விளம்பரம் வேண்டாத அநேக கோடி பக்தர்களின் பங்களிப்பிற்குத் தாழ்த்துகிறோம் நம் தலையை.*

*அறக்கட்டளை நிர்வாகக் குழு உறுப்பினர் என்பது யார் என்றே அநேகருக்கும் வெளியே தெரியாத வண்ணம் நிர்வாக வாரிசுத் தலைமைக்கு அனுசரித்து பக்தர்களின் நிம்மதியை பாதுகாக்கும் அறக்கட்டளைக் குழுவினருக்கும் கண்டிப்பாகத் தலை வணங்க வேண்டும்.*

*இப்படியாக "மேன்மேல் தாழ்ந்திடும் மெல்லியர் சேர்ந்து மேன்மையுற்றிடும் எங்கள் ரமணாஸ்ரமம்".*

*குறிப்பு: இந்தக் கட்டுரையின் கருத்தைத் தழுவியே இந்த ரமணோதயம் இதழ் அட்டைப் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.*



மகாபூஜை - மாத்ருபூதேஸ்வரர் ஆலயம், ஸ்ரீரமணாஸ்ரமம்

# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### அன்னை அழகம்மை - மகாபூஜை

*பகவான் ரமணரின் நேரடிப் பார்வையில் சிறிது சிறிதாக பக்குவப்படுத்தப்பட்டு அவரது மடியில் முக்தியடையும் பேறுபெற்ற அன்னை அழகம்மையின் சமாதி தினம் (மகாபூஜை) 14/6/2020 அன்று ஆச்ரமத்தில் எளிமையான முறையில் நடைபெற்றது.*

*பிற்காலத்தில் ஸ்ரீ ரமணாஸ்ரமம் என்று உருவானது அன்னை அழகம்மை சமாதி வைக்கப்பட்ட இடம்தான் என்பது குறிப்பிடத்தக்கது.*

### பசு லட்சுமி ஆராதனை

*உடலால் மிருகமாக இருந்தாலும் பகவானின்மீது கொண்ட அசாதாரணப் பக்திப் பிரேமையினால் ஆன்மிக முன்னேற்றம் அடைந்து அவரது மடியிலேயே முக்திபெறும் பேறு பெற்ற பசு லட்சுமியின் ஆராதனை 02/07/2020 வியாழக்கிழமை*

*ஆச்ரமத்தில் அமைந்துள்ள பசு லக்ஷ்மி சமாதியில் எளிமையான முறையில் நடைபெற்றது.*

## குருபூர்ணிமா

*5/7/2020 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ ரமணாச்ரமத்தில் குருபூர்ணிமா எளிமையான முறையில் நடைபெற்றது.*

## ரமண கேந்திர செய்திகள்

## ரமண கேந்திரம், மைலாப்பூர்.

*கொரானா எனும் கொடிய தொற்றுநோயின் பரவல் உலகளவில் பேரழிவு ஏற்படுத்திக்கொண்டுள்ள இக்காலகட்டத்தில், மேலும் இந்த பேரிடர் பரவாது தடுக்க வேண்டி அரசாங்கம் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும் வண்ணம், ரமண கேந்திரம் அனைத்து சத்சங்க கூட்டங்களை தவிர்த்து, மிக எளிய முறையில் சமூக இடைவெளி கடைப்பிடித்து தினசரி பூஜைகளையும் விசேஷ நாட்களையும் அனுசரித்து வருகிறது. பக்தர்கள் கூடுவதை தவிர்த்து கவனத்துடன் செயல்படுகிறது.*



*பசு லட்சுமி ஆராதனை, ஸ்ரீரமணாஸ்ரமம்*



## மாத்ருபூதேஸ்வரர் மகா பூஜை

*அன்னை அழகம்மையின் சமாதி தினம் (மகாபூஜை) 14/6/2020 அன்று எளிமையான முறையில் கொண்டாடப்பட்டது.*

## பசு லட்சுமியின் ஆராதனை

*பசு லட்சுமியின் ஆராதனை 02-07-2020 வியாழக்கிழமை எளிமையான முறையில் நடைபெற்றது.*



குருபூர்ணிமா, ஸ்ரீரமணாஸ்ரமம்



குருபூர்ணிமா, ரமணாலயம், குரோம்பேட்டை

## குருபூர்ணிமா

*5/7/2020 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ ரமணாச்ரமத்தில் குருபூர்ணிமா எளிமையான முறையில் நடைபெற்றது*

## குரோம்பேட்டை, ரமணாலயம்

*மகாபூஜை (14/6/2020), பசு லட்சுமி ஆராதனை (2/7/2020) மற்றும் குருபூர்ணிமா (5/7/2020) ஆகிய நிகழ்வுகள் குரோம்பேட்டை ரமணாலயத்தில் எளிமையான முறையில் நடைபெற்றது.*

*திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் உதவியுடன் இப்பேரிடர் நாட்களிலும் எளியவர் துயர் துடைக்கும் நோக்குடன் நாள்தோறும் 100 பேருக்கு நாராயண சேவை மதியம் நடைபெறுகிறது.*

## ரமண சச்சிதானந்த சபை,
## கிருஷ்ணாபுரம் சூளைமேடு சென்னை.

### மாத்ருபூதேஸ்வரர் மஹாபூஜை 14/6/2020

*அன்னை அழகம்மை ஆராதனை 14/6/2020 அன்று திருவாசக சென்நாவலர் சதகுருநாத ஓதுவார் தலைமையில் திருவாசக முற்றோதல் சிறப்பாக நடைபெற்றது.*

# ஆஞ்சநேயலு




*தனது 23 ஆவது வயதில் 14.5.1967 அன்று ஸ்ரீ ரமணாச்ரம கட்டிட வேலைக்காக பெங்களூரிலிருந்து என்ஜினியர் பத்மநாபன் அவர்களால் அழைத்துவரப்பட்ட ஆஞ்சநேயலு தனது 75 ஆவது வயதில் 14.5.2020 அன்று பெங்களூரில் அருணாசல சிவனில் ஐக்கியமானார்.*

*பகவானது சமாதிக் கட்டிடத்தின் இறுதி வேலைப்பாடுகள், முன் மண்டபம், ரமண நூற்றாண்டு நினைவு நூலகம், வேதபாடசாலை விரிவாக்கம், ஆச்ரம அறைகள், பக்தர்கள் தங்கும் விடுதிகள், பக்தர்களுக்கு ரமண நகரில் மலிவு விலையில் வீடுகள் என இவரது ஆச்ரம கட்டிடப் பணிகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.*

*ஸ்ரீ ரமணாச்ரம மற்றும் ரமண பக்தர்களின் நிதியுதவியுடன் அண்ணாமலையார் ஆலய ஆயிரங்கால் மண்டபச் சீரமைப்பு, பகவான் தனதன்னைக்கு உபதேசித்த இடமான பவழக்குன்று கோயில், ஆதிகாமாட்சி ஆலயம், பச்சையம்மன் கோயில் ஜீர்ணோத்தாரணம் மற்றும் பகவானது வாழ்வில் சம்பந்தப்பட்டுள்ள திருச்சுழி, மதுரை மற்றும் அரகண்டநல்லூர் என இவரது ரமணத் தொண்டு நீண்டு வளர்ந்துள்ளது.*

*இவரது வாழ்வில் இவர் பெற்றுள்ள ரமண கருணை நிகழ்ச்சிகளும் பல உள. இவரது பிரிவினை நினைந்துவாடும் இவரது மனைவி மக்களுக்கு பகவான் ரமணர் தனது அருள் விலாசத்தைத் தொடர்ந்து அளிப்பது திண்ணம். அன்னாரின் குடும்பத்தாருக்கு ரமணோதயம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.*

# சந்துரு மாமா (எ) சந்திரசேகரன்



*சந்துரு மாமா என்று ஸ்ரீரமணாச்ரம அன்பர்களால் மரியாதையுடன் அழைக்கப் பட்ட திரு. சந்திர சேகரன் அவர்கள் 99 ஆவது வயதில் கடந்த 22.6.2020 அன்று தனது தேகத்தைத் துறந்து பகவானது திருவடி நிழலை அடைந்தார்.*

*திருவண்ணாமலை திருக்கார்த்திகை தீபோற்சவ காலங்களில் நடைபெறும் வேதபாராயண யக்ஞ மகோத்ஸவத்தை பல்லாண்டு காலமாக மிகச் சிறப்பாக நிர்வகித்து வந்தவர்.*

*ரமணாச்ரமத்திற்கு உள்ளூர் வேலைகளில் உறுதுணை புரிந்தவர். 1953 முதல் 1994 வரை ஸ்ரீ ரமணாச்ரமத் தலைவராக இருந்த சுவாமி ரமணானந்தா (T.N.வேங்கடராமன்) அவர்களின் நெருங்கிய நண்பர். இவர், பல்லாண்டுகள் ரமணாச்ரமவாசியாக இருந்த K. நடேசன் அவர்கள் இளைய சகோதரரும் பகவானுக்கு பல்லாண்டுகள் அன்னமளித்துவந்த எச்சம்மாளுக்கு உறவினரும் ஆவார்.*

*தனது இல்லத்திலேயே K. நடேசன் அவர்களுக்கு கடைசி காலத்தில் சில ஆண்டுகள் சேவை செய்யும் பெரும் பாக்கியமும் பெற்றவர்.*

*அன்னாரின் பிரிவினை நினைந்து வாடும் குடும்பத்தாருக்கு ரமணோதயம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை, ரமணாலயம்*** | .......... | 9444261296 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| ***புதுச்சேரி*** *ரமண கேந்திரம்* | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | .......... | 9486576687 |


---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



என்போலும் தீனரை இன்புறக் காத்துநீ
எந்நாளும் வாழ்ந்துஅருள் அருணாசலா!

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542